**வங்கி அட்டை உறுப்பினர் உடன்படிக்கை**

முக்கியம்: நேசன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி இலிருந்தான மூடிய வங்கி அட்டையில் நீர் கையொப்பமிடுவதற்கு முன்னர் அல்லது அதனைப் பயன்படுத்துவதற்கு முன்னர், இவ்வங்கி அட்டை உறுப்பினர் உடன்படிக்கையை கவனமாக வாசிக்கவும்.

அவ்வங்கி அட்டையை ஏற்றுக்கொள்வதன் மூலம் அத்துடன் அல்லது அதில் கையொப்பமிடுவதன் மூலம் அத்துடன் ∴ அல்லது அதனைப் பயன்படுத்துவதன் மூலம் கீழே தரப்பட்ட நியதி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கும் அவற்றினால் பிணிக்கப்படுவதற்கும் நீர் உடன்படுகின்றீர்.

**1. வரைவிலக்கணங்கள்:**

வங்கி என்பது, நே'ன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி, அதன் அடுத்துறுநர்கள் மற்றும் சாட்டுநர்கள் எனப்பொருள்படும்.

அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் என்பது, வங்கியானது எந்த நபரின் பெயரில் வங்கி அட்டையுடனான கணக்கொன்றை திறந்துள்ளதோ அல்லது திறப்பதற்கு முடிபுசெய்துள்ளதோ அந்த நபர் எனப் பொருள்படும்.

வங்கி அட்டை என்பது, வங்கியினால் வழங்கப்படும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கோல்ட், க்ரீன், ப்ளு அல்லது வேறு ஏதேனும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வர்த்தகக் குறியிடப்பட்ட கடன் அட்டை எனப்பொருள்படும்.

வங்கி அட்டைக் கணக்கு என்பது, இவ்வுடன்படிக்கையின் கீழ், வங்கி அட்டையின் மீது அடிப்படை வங்கி அட்டை உறுப்பினராலும் துணைநிலை உறுப்பினர் (உறுப்பினர்கள்) எவரேனும் இருப்பின் அவர்களாலும் பெறப்பட்ட அல்லது ஏற்க நேர்ந்த எல்லா வரவுகளையும் பற்றுகளையும் பதியும் நோக்கத்துக்காக வங்கியினால் திறக்கப்பட்ட கணக்கு எனப் பொருள்படும்.

பண முற்பணம் என்பது, வங்கி அட்டை, வங்கி அட்டை இலக்கம் அல்லது தனியாள் இனங்காணல் எண்ணைப் (PIN) பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு செயற்பாடு எனப் பொருள்படும்.

பண முற்பண உச்சவரம்பு என்பது, பண முற்பணங்களுக்காக வங்கியினால் அனுமதிக்கப்படும் அதிகபட்ச உச்சவரம்பு எனப் பொருள்படும்.

விதிப்பனவு அல்லது கொடுக்கல்வாங்கல் என்பது, இவ்வுடன்படிக்கையின் கீழ் அறவிடப்படும் ஏற்புடையனவான கட்டணங்கள் மற்றும் வங்கி அட்டை உறுப்பினர் வங்கிக்குச் செலுத்துவதற்கு உடன்படுகின்ற ∴ உடன்பட்டுள்ள அல்லது பொறுப்பாகவிருப்பதற்கு உடன்படுகின்ற ∴ உடன்பட்டுள்ள வேறு எல்லாத் தொகைகளும் உட்பட வங்கி அட்டை மூலமாகச் செய்யப்பட்ட அல்லது வங்கி அட்டைக்கு விதிப்பனவுசெய்யப்பட்ட ஏதேனும் கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்.

கடன் உச்சவரம்பு என்பது, வங்கி அட்டையுடனான கணக்கின்மீது வங்கியினால் அனுமதிக்கப்படும் நிலுவையாகவுள்ள அதிகபட்ச பற்று மீதி எனப் பொருள்படும்.

தற்போதைய மீதி என்பது, ஒரு குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு வங்கி அட்டையுடனான கணக்கின் மீது நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை எனப் பொருள்படும்.

வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவு என்பது, கொடுப்பனவுக்குரிய திகதியில் செலுத்தப்படவேண்டிய குறைந்தபட்சத் தொகையாக வங்கிக்கூற்றில் குறித்துரைக்கப்பட்ட தொகை எனப்படும்.

கடல்கடந்த கொடுக்கல்வாங்கல்கள் என்பது, கடல்கடந்து செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் எனப் பொருள்படும்.

கடந்தகால வருமதி என்பது, கடந்தகால வங்கிக் கூற்றிலிருந்து (வங்கிக் கூற்றுகளிலிருந்து) நிலுவையாகவுள்ள வருமதியாகவுள்ள ஒன்றுசேர்ந்த குறைந்தபட்ச கொடுப்பனவு (எவையேனுமிருப்பின்) அவையாகும். ஏதேனும் கடந்தகால வருமதி வங்கிக்கூற்றின் மீது தனிவேறாக காட்டப்படுவதுடன் உடனடியாக செலுத்த வேண்டும்.
கொடுப்பனவுக்குரிய திகதி என்பது, மொத்த நிலுவையாகவுள்ள கொடுப்பனவு அல்லது அதன் ஏதேனும் பாகம் அல்லது வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவு எந்த திகதியில் வங்கிக்குச் செலுத்தப்படவுள்ளதோ அந்தத் திகதியாக வங்கிக்கூற்றில் குறித்துரைக்கப்பட்ட திகதி எனப் பொருள்படும்.

PIN என்பது, தன்னியக்க வங்கிப்பொறியினூடாக (ATM) வங்கி அட்டையைப் பயன்படுத்துவதற்கு வங்கியினால் வழங்கப்படும் அல்லது வங்கி அட்டை உறுப்பினரினால் தெரிவுசெய்யப்படும் தனியாள் இனங்காணல் எண் எனப் பொருள்படும்.

பிந்தைய திகதி என்பது, கொடுக்கல்வாங்கலொன்று எந்த திகதியன்று செய்முறைப்படுத்தப்பட்டு வங்கி அட்டையுடனான கணக்குக்கு கொடுத்துத்தீர்க்கப்படுகின்றதோ அந்த திகதி எனப் பொருள்படும்.

சேவை நிறுவனங்கள் என்பது, எங்கெல்லாம் பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவு சாதனமொன்றாக வங்கி அட்டையை ஏற்கின்ற அல்லது வங்கி அட்டையை ஏற்றுக்கொள்ள விரும்புகின்ற நிறுவனங்கள் அமைந்திருந்தாலும், எனப் பொருள்படும்.

வங்கிக்கூற்று என்பது, அனுப்பப்படும் திகதியில் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் மற்றும் எவரேனும் துணைநிலை வங்கி அட்டை உறுப்பினரின் (உறுப்பினர்களின்) வங்கிக்கான நிதிசார் பொறுப்புக்களை குறிப்பிட்டு வங்கியினால் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அனுப்பப்படும் அக்கணக்கு (கணக்குகள்) பற்றிய மாதாந்த வங்கிக்கூற்றொன்று அல்லது கணக்கு பற்றிய வேறு காலாகால வங்கிக்கூற்று எனப் பொருள்படும்.

துணைநிலை வங்கி அட்டை உறுப்பினர் என்பது, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் கோரிக்கையின் பேரில் வங்கி அட்டையொன்று வழங்கப்படுகின்றவரும் தனது விதிப்பனவுகள் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் வங்கி அட்டையுடனான கணக்குக்கு விதிப்பனவுசெய்யப்படுகின்றனவுமாகவுள்ள அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் தவிர்ந்த தனியாள் ஒருவர் எனப் பொருள்படும்.

T-PIN என்பது, தொலைபேசியினூடாக வங்கியுடனான ஆளடையாளம் காணல் நோக்கங்களுக்காக வங்கியினால் வழங்கப்படும் அல்லது வங்கி அட்டை உறுப்பினரினால் தெரிவுசெய்யப்படும் தொலைபேசி தனியாள் இனங்காணல் எண் எனப் பொருள்படும். இவ்வசதி வங்கியின் தற்றுணிபில் கிடைக்கக்கூடியதாக்கப்படும்.

மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர் என்பது, வங்கியானது வங்கி அட்டையினூடாக நீடிக்கப்பட்ட நன்மைகள் அத்துடன் / அல்லது சேவைகளை வழங்குவதற்கு எந்த மூன்றாம் திறத்தவருடன் இணையுமோ அந்த மூன்றாம் திறத்தவர் ஒருவர் எனப் பொருள்படும்.

வருமதியாகவுள்ள மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவு என்பது, வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவு மற்றும் கடந்தகால வருமதியின் மொத்தம் ஆகும். இது வங்கிக்கூற்றில் தனிவேறாக காட்டப்படுகின்றது.

நிலுவையாகவுள்ள மொத்தம் என்பது, வங்கிக்கூற்று வழங்கப்படுகின்ற திகதியன்று வங்கிப் பதிவேடுகளுக்கிணங்க வங்கிக்கு செலுத்தப்படக்கூடிய வங்கி அட்டையுடனான கணக்கின்மீது நிலுவையாக உள்ள (வங்கி அட்டையுடனான கணக்குக்கு பற்று வைக்கப்படவேண்டிய எல்லா விதிப்பனவுகளும் உட்பட) மொத்த பற்று மீதி எனப் பொருள்படும்.

கொடுக்கல்வாங்கல் திகதி என்பது, வங்கி அட்டை உறுப்பினர் ஒருவருக்கும் சேவை நிறுவனமொன்றுக்குமிடையிலான கொடுக்கல்வாங்கல் ஒன்று எந்தத் திகதியன்று இடம்பெறுகின்றதோ அந்தத் திகதி எனப் பொருள்படும்.

அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் மற்றும் துணைநிலை வங்கி அட்டை உறுப்பினர் ஆகிய ஒவ்வொருவரும் ‘‘வங்கி அட்டை உறுப்பினர்’’ ஒருவராகவும் மற்றும் கூட்டாக ‘‘வங்கி அட்டை உறுப்பினர்கள்’’ எனவும் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

## 2. நியதிநிபந்தனைகளின் ஏற்புடைத்தன்மை மற்றும் நியதிச் சட்ட இணங்கியொழுகுகை:

2.1 வங்கி அட்டை அல்லது வங்கி அட்டையுடனான கணக்கின் மீது அல்லது அது தொடர்பாக எவரேனும் ஆளுக்கு வங்கியினால் கிடைக்கக்கூடியதாகவுள்ள எல்லா வசதிகளும் இவ்வுடன்படிக்கையில் உள்ள நியதிநிபந்தனைகளுக்கும் காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறான வலுவிலுள்ள வேறு ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்கியுள்ள நியதி நிபந்தனைகளுக்கும் விதிப்புகளுக்கும் அமைந்தனவாகவிருக்கும்@ வங்கி அட்டை உறுப்பினர் (விடயத்துக்கேற்ப) வங்கி அட்டைக்கான விண்ணப்பத்தின்மீது தனது கையொப்பத்தை இடுவதன்மூலம் அத்துடன் / அல்லது வங்கி அட்டையின் மீது தனது கையொப்பத்தை இடுவதன் மூலம் அத்துடன் / அல்லது வங்கி அட்டையைப் பயன்படுத்துவதன் மீது அந்நியதிநிபந்தனைகளை தான் ஏற்றுக்கொள்வதனை முழுமையாக சான்றளிக்கின்றார்.

2.2 வங்கி அட்டையைப் பயன்படுத்துவதானது, காலத்துக்குக் காலம் திருத்தப்படுகின்றவாறான எல்லா ஏற்புடையனவான சட்டங்கள், இலங்கையின் இயைபான செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்புடையனவான எவையேனும் கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் கண்டிப்பாக இணங்கியனவாக இருத்தல் வேண்டும்.

2.3 வங்கி அட்டை உறுப்பினர் வர்த்தகக் தொகைகளிலான பண்டங்களை கொள்வனவு செய்வதற்கு / இறக்குமதி செய்வதற்கு அல்லது மூலதன கொடுக்கல்வாங்கல்களுக்காக வங்கி அட்டையை (அட்டைகளை) பயன்படுத்துதலாகாது.

2.4 வங்கி அட்டையை பயன்படுத்துவதானது, இலத்திரனியல் நிதிப் பரிமாற்றம் (EFT) அல்லது வெளிநாட்டு நாணயமொன்றில் ATM இலிருந்து மீளப்பெறுதலை அவசியமாக்குகின்ற பட்சத்தில், அது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைந்ததாக இருக்கும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்காகவும் மட்டுமே இருக்கும்.

2.5 வங்கியானது செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அத்துடன் / அல்லது காலத்துக்குக் காலம் விதிக்கப்பட்டவாறான வேறு ஒழுங்குபடுத்தும் அதிகாரியின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுக தேவைப்படுத்தப்படுகின்றதுடன் அவற்றைப் பின்பற்றி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின்கீழ் இயைபான அதிகாரிகளுக்கு கொடுக்கல்வாங்கல் பற்றிய தகவல்களை வெளிவிட தேவைப்படுத்தப்படுகின்றது.

2.6 வங்கியானது, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கான அறிவித்தலுடன் அடிப்படை வங்கி அட்டையை அத்துடன் / அல்லது ஏதேனும் துணைநிலை வங்கி அட்டையை இரத்துச்செய்கின்ற நேரத்தில் வலுவிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள் அல்லது வேறு எவையேனும் நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளின் மீறுகையொன்று இருந்துள்ளது என நம்புவதற்கான எத்தகையதுமான ஏதேனும் காரணத்தை வங்கி கொண்டிருக்கின்ற பட்சத்தில், அத்தகையதாக அவ்வட்டைகளை இரத்துச் செய்யலாம்.

**3. வங்கி அட்டைச் சேவைகள்:**

வங்கி அட்டை உறுப்பினர் அட்டையைப் பெற்றுக்கொண்டவுடன் அதன் மறுபக்கத்தில் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் வங்கி அட்டையில் உள்ள கையொப்பம் விண்ணப்பப் படிவத்தில் உள்ள கையொப்பத்தைப் போன்று ஒரே மாதிரியாக இருத்தல் வேண்டும். வங்கி அட்டையானது கைமாற்றப்படுதலாகாது என்பதுடன் அதன் பயன்பாடு இவ்வுடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுக்கும் வங்கியினால் விதிக்கப்பட்டவாறான எவையேனும் மேலதிக நிபந்தனைகளுக்கும் அமைந்ததாகவிருக்கும்.

**4. வங்கி அட்டையை ஒப்படைத்தல்:**

வங்கி அட்டைகள் விரைதூதர் (Courier) சேவையூடாக அனுப்பப்படும், பதிவுத் தபாலில் அனுப்பப்படும் அல்லது வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மூன்றாம் திறத்தவரொருவரினால் கருமபீடத்தில் பெற்றுக்கொள்ளப்படும். அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் மற்றும் எவரேனும் துணைநிலை வங்கி அட்டை உறுப்பினர் வங்கி அட்டையை (அட்டைகளை) பெற்றுக்கொள்ளும் போது, அவர் தனது ஆளடையாளத்துக்கான சான்றைக் காண்பித்தல் வேண்டும் என்பதுடன் வழங்கப்படும் ஒப்புக்கொள்ளல் சீட்டில் உரியமுறையில் கையொப்பமிட்டு உடனடியாக பெறுகையை ஒப்புக்கொள்ளுதலும் வேண்டும்.

வங்கி அட்டை உறுப்பினர் தனது தற்றுணிபில் அவர் சார்பாக வங்கி அட்டையை (அட்டைகளை) ஏற்றுக்கொள்வதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு மூன்றாம் திறத்தவரொருவருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம் என்பதுடன் வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது அவர் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் வங்கி அட்டை ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நேரத்திலிருந்து வங்கி அட்டையின்மீது ஏற்கநேர்ந்த எல்லா விதிப்பனவுகளுக்கும் பொறுப்பாவார். வங்கியானது அதன் தற்றுணிபில் வங்கி அட்டை உறுப்பினரின் பிரதிநிதியாகவிருப்பதற்கு வங்கியினால் அல்லது அதன் பிரதிநிதியினால் தீர்மானிக்கப்படும் மூன்றாம் திறத்தவரொருவருக்கு வங்கி அட்டையை கையளிக்கலாம். வங்கி அட்டை ஒப்படைக்கப்படுகின்ற நேரத்திலிருந்து வங்கி அட்டையின் மீதான எல்லா விதிப்பனவுகளுக்கும் வங்கி அட்டை உறுப்பினர் பொறுப்பாதல் வேண்டும்.

**5. வங்கி அட்டையின் பயன்பாடு:**

5.1 வங்கி அட்டையானது உலகளாவிய ரீதியில் செல்லுபடியானதாகும்@ எவ்வாறாயினும், வங்கி மற்றும் சம்பந்தப்பட்ட சேவை நிறுவனங்கள் எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக சேவை நிறுவனமொன்றில் வங்கி அட்டையின் பயன்பாட்டை எந்நேரத்திலும் மறுப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளன. வங்கி அட்டையானது நல்லெண்ணத்துடனான தனிப்பட்ட அல்லது அலுவலகமுறையான நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படலாம் என்பதுடன் அதன் பயன்பாடானது வங்கி அட்டை உறுப்பினரின் தொழிலில் வர்த்தக ரீதியில் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஏற்கநேர்ந்த விதிப்பனவுகளானவை சில சேவை நிறுவனங்களின் விடயத்தில், கொள்வனவு அல்லது வேறு வசதியைப் பயன்படுத்துவதற்கான ஒரு விதிப்பனவையும் உள்ளடக்கலாம் என தெளிவுபடுத்தப்படுகின்றது.

5.2 வங்கி அட்டை உறுப்பினர் தனது PIN மற்றும் T-PIN என்பவற்றை இரகசியமாகவும் வங்கி அட்டையிலிருந்து தனிவேறாகவும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கி அட்டையானது பாதுகாப்பானதோர் இடத்தில் வைக்கப்படுகின்றது எனவும் வேறு எவரேனும் தனியாளினால் பயன்படுத்தப்படுவதில்லை எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினர், வங்கி அட்டை உறுப்பினரின் அறிவுடன் அல்லது அவரது அறிவின்றி வங்கி அட்டை அத்துடன் / அல்லது PIN அத்துடன் / அல்லது T-PIN மூலம் செய்யப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களுக்கும் முழுமையாக பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

5.3 சேவை நிறுவனமொன்றில் வங்கி அட்டையைப் பயன்படுத்துவதன் மேல், விதிப்பனவுச் சீட்டில் கையொப்பமிடும் நேரத்தில் விதிப்பனவுச் சீட்டின் பிரதியொன்றை வங்கி அட்டை உறுப்பினர் பெற்றுக்கொள்ளல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும், வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட உச்சவரம்பொன்று வரையான குறித்த சில கொடுக்கல்வாங்கல்களுக்கு, விதிப்பனவுச் சீட்டுத் தாள் எதுவும் வழங்கப்படமாட்டாது. வங்கி அட்டை உறுப்பினர் (மொபைல் பாங்கிங், Frimi முதலிய) வங்கியின் எண்ணிம வழிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிவுசெய்திருப்பின்

அவற்றினூடாக விதிப்பனவுச் சீட்டின் பிரதியொன்றைப் பார்வையிடுவதற்கு வங்கி அட்டை உறுப்பினருக்கு இயலுமானதாகவிருக்கும். சாதாரணமாக, வங்கியானது வேறு விதிப்பனவுச் சீட்டுக்களின் பிரதிகளை வங்கி அட்டை உறுப்பினருக்கு வழங்குதலாகாது. எவ்வாறாயினும், வங்கியின் தற்றுணிபில், வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மேலதிகக் கட்டணங்களின் கொடுப்பனவின் மீது பிரதிகள் வழங்கப்படலாம்.

5.4 வங்கியானது, இணையத்தினூடாக அஞ்சற் கட்டளை அல்லது தொலைபேசிக் கட்டளைக் கொள்வனவுகள் அல்லது கொடுக்கல் வாங்கல்களை பயனுறுத்தும் வசதியை தனக்கு வழங்குவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட வகையில் உடன்படலாம் என வங்கி அட்டை உறுப்பினர் ஏற்றுக்கொள்கின்றார் என்பதுடன் அத்தகைய விடயங்களில், வங்கி அட்டை பயன்படுத்தப்படும் நேரத்தில் வங்கி அட்டை உறுப்பினரினால் விதிப்பனவுச்சீட்டுக்கள் கையொப்பமிடப்படமாட்டாது. அதற்கிணங்க, வங்கி அட்டை உறுப்பினர், எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக அத்தகையதொரு கொள்வனவு அல்லது விதிப்பனவொன்றின் நம்பகத்தன்மை அல்லது செல்லுபடியான தன்மை தொடர்பான ஏதேனும் பிணக்கு ஏற்படுகின்ற பட்சத்திலும் கூட, வங்கி அட்டை உறுப்பினர் நிலுவைகளை கொடுத்துத்தீர்ப்பார் என ஏற்றுக்கொள்கின்றார். அத்தகைய ஏதேனும் பிணக்கு வங்கி அட்டை உறுப்பினருக்கும் சம்பந்தப்பட்ட சேவை நிறுவனத்துக்கும் இடையிலான ஒரு விடயமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கி அட்டை உறுப்பினரினாலும் சேவை நிறுவனத்தினாலும் தீர்க்கப்படும். வங்கியானது எத்தகையதுமான ஏதேனும் முறையிலும் அவற்றுக்கு பொறுப்பாதலாகாது.

5.5 வங்கி அட்டையானது அதன் முகப்பின் மீது பொறிக்கப்பட்ட மாதத்தின் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

5.6 வங்கியின் தற்றுணிபுக்கமைய, புதுப்பித்தல் அத்துடன் / அல்லது மாற்றீட்டு வங்கி அட்டைகள், அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரினால் கீழே 30.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட முறையில் முரணாக வங்கிக்கு அறிவிக்கப்படும் அத்தகைய நேரம் வரை ஒவ்வொரு வங்கி அட்டை உறுப்பினருக்கும் வழங்கப்படுதல் வேண்டும் என நிலையான கோரிக்கையொன்றை வங்கி அட்டை உறுப்பினர் செய்துள்ளார் என அவர் உடன்படுகின்றார். வங்கி அட்டை காலாவதியாவதன் மீது, காணாமல் போவதன் மீது, அதற்கு சேதம் ஏற்படுவதன் மீது அல்லது அது திருடப்படுவதன்மீது வங்கி அட்டையை புதுப்பிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அது புதுப்பிக்கப்படாத பட்சத்தில், வங்கி அட்டை உறுப்பினர் ஆட்சேபனை அல்லது தாமதமின்றி வங்கிக்கு வருமதியாகவுள்ள மீதியை உடனடியாக கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்.

5.7 வங்கி அட்டை உறுப்பினர், வங்கி அட்டை (அட்டைகள்) மற்றும் வங்கியுடனான எல்லா விவகாரங்களும் தொடர்பாக எல்லா நேரத்திலும் நல்லெண்ணத்துடன் செயற்படுவதற்கு பொறுப்பேற்றல் வேண்டும்.

5.8 வங்கியானது, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம், கடன் உச்ச வரம்பை இடைநிறுத்துவதற்கான அல்லது குறைப்பதற்கான தற்றுணிபை தனக்கு வைத்திருக்கின்றது என்பதுடன் வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம் எந்நேரத்திலும் வங்கி அட்டை மீதான அதிகாரவளிப்புக் கோரிக்கையொன்றை மறுக்க அல்லது ஏற்க முடியும். வங்கியானது, கடன் உச்சவரம்பிலான அத்தகைய இடைநிறுத்துகை, மறுப்பு அல்லது குறைப்பு அல்லது வங்கி அட்டை மீதான அதிகாரவளிப்புக் கோரிக்கையின் மறுப்பு காரணமாக வங்கி அட்டை உறுப்பினரினால் அடையப்பெற்ற ஏதேனும் இழப்பு அத்துடன்/ அல்லது சேதம் அத்துடன் / அல்லது நன்மதிப்புக்கான ஊறு என்பவற்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் விளைவுக்கு பொறுப்பாதலாகாது.

**6. வங்கி அட்டையானது கடல் கடந்து பயன்படுத்தப்படுதல்:**

வங்கி அட்டையானது சேவை நிலையங்களில் சர்வதேச ரீதியில் செல்லுபடியாகவுள்ளது என்பதுடன் அதன் பயன்பாடு இலங்கை மத்திய வங்கியின் (CBSL) வழிகாட்டுநெறிகளின்படி உரித்துடைமைகளை விஞ்சினால், அப்போது வங்கி அட்டை உறுப்பினா; CBSL இடமிருந்து தேவையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கும் ஊடீளுடு தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கும் பொறுப்பேற்கின்றார். எவ்வாறாயினும், எச்சூழ்நிலைகளிலும் வங்கிக் கூற்றில் விவரிக்கப்பட்டவாறான வருமதியாகவுள்ள தொகைகளின் மீள்கொடுப்பனவு, மிகைப்பற்று என்ற ஏதுக்களின்மீது தாமதிக்கப்படுதலோ அல்லது மறுக்கப்படுதலோ ஆகாது.

**7. வங்கி அட்டை உறுப்பினர் வெளிநாடு செல்லல்:**

நிரந்தரத் தொழிலுக்காக குடிபெயர்கின்ற அத்துடன் / அல்லது வெளிநாடு செல்கின்ற அல்லது அந்நேரத்தில் வலுவிலுள்ள செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் வரைவிலக்கணங்களின்படி "வதிவற்றவர்" எனக் கருதப்படுகின்ற வங்கி அட்டை உறுப்பினரொருவர் வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத எல்லா விதிப்பனவுகளையும் கொடுத்துத் தீர்த்தலும் வேண்டும். அத்துடன் (ஏற்புடையதானவாறு) அடிப்படை வங்கி அட்டை மற்றும் எவையேனும் துணைநிலை வங்கி அட்டைகளை மீள ஒப்படைத்தல் வேண்டும்.

**8. வதிவற்ற இலங்கையருக்கான வங்கி அட்டை (NRSL):**

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிலவுகின்ற வழிகாட்டுநெறிகளின்படி வதிவற்ற இலங்கையர்கள் வங்கி அட்டைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் வங்கி அட்டை உறுப்பினர் (ஏற்புடையதானவாறு) அடிப்படை வங்கி அட்டை மற்றும் ஏதேனும் துணைநிலை வங்கி அட்டையை (அட்டைகளை) வங்கிக்கு திருப்பி ஒப்படைத்தல் வேண்டும்.

**9. வெளிநாட்டவர்களுக்கான வங்கி அட்டைகள்:**

வெளிநாட்டவரான வங்கி அட்டை உறுப்பினர் இலங்கையில் வசிப்பவராகவிருப்பின் அவர் வங்கி அட்டையைப் பயன்படுத்தலாம். அத்தகைய வெளிநாட்டவரான வங்கி அட்டை உறுப்பினர் நாட்டை விட்டு நிரந்தரமாக விட்டுச்செல்பவராக இருப்பின் ஒரு மாதத்தக்கு முன்னர் அத்துடன் / அல்லது அவரது வதிவிட விசா காலாவதியாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் எழுத்தில் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும். அவர், மேற்கூறப்பட்ட நிகழ்வுகளில் ஏதேனும் ஒன்று இடம்பெறுவதற்கு முன்னர் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத விதிப்பனவுகளை வங்கிக்கு முழுமையாக கொடுத்துத்தீர்த்தல் வேண்டும் என்பதுடன் வங்கி அட்டையை (அட்டைகளை) மீள ஒப்படைத்தலும் வேண்டும்.

**10. வெளிநாட்டு நாணயத்திலான விதிப்பனவுகள்:**

10.1 இலங்கை ரூபா தவிர்ந்த நாணயங்களில் பயனுறுத்தப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவுக்கு மாற்றப்பட்ட பின்னர் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படும்.

10.2 ஐக்கிய அமெரிக்க டொலர்களிலான (ருளுனு) எல்லா வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்களும் வங்கியினால் பேணப்படும் நிலவுகின்ற ஐ.அ.டொ/ நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி மாற்றப்படும். ஐ.அ.டொ தவிர்ந்த வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்களின் விடயத்தில், கொடுக்கல்வாங்கலானவை பட்டியலிடும் நாணயத்திற்கு மாற்றப்படுவதற்கு முன்னர் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனியினால் ஐ.அ.டொ இற்கு மாற்றப்படும். உள்நாட்டு நாணயமாற்று வீத நகர்வுகளை மட்டுப்படுத்துவதற்கு மேலதிகத் தொகையொன்று (2.5மூ வரை) பட்டியலிடும் நேரத்தில் வீதத்துக்கு சேர்க்கப்படும்.

**11. பண முற்பணங்கள்:**

11.1 வங்கி அட்டை உறுப்பினரொருவரினால் தன்னியக்க வங்கிப் பொறிகள் (ATM), வங்கிக் கிளைகள், வங்கியின் பணம் செலுத்தீடு செய்யும் வணிகர்கள், முகவர்களிடமிருந்து அல்லது எண்ணிம வழிகளினூடாக பெறப்பட்ட பண முற்பணங்கள், யுவுஆஇ வங்கி, வணிகர், முகவர், உள்நாட்டு அல்லது நாட்டு வரையறைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்தனவாகவிருக்கும். மத்திய வங்கி மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்கள ஒழுங்குவிதிகளும் ஏற்புடையனவாகும். வங்கி அட்டை உறுப்பினாருக்கு வங்கியினால் வழங்கப்பட்ட PIN இனை பயன்படுத்தினாலொழிய வங்கி அட்டை மூலம் ATM களில் இருந்து பணமுற்பணங்களை பெற்றுக்கொள்வதற்கு இயலுமானதாகவிருக்காது.

11.2 வங்கி அட்டை உறுப்பினர் ஒருவர் பணமுற்பண உச்ச வரம்பு வரை பணமுற்பணங்களைப் பெறமுடியும். வங்கி அட்டைக் கணக்குக்கான தற்காலிக கடன் உச்சவரம்பு அதிகரிப்புக்கள் அத்துடன் / அல்லது பணவைப்புக்கள் அல்லது நிதிப்பரிமாற்றங்கள் எவ்வகையிலும் பணமுற்பண உச்சவரம்பை அதிகரிக்காது.

11.3 இவ்வசதி அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம் வங்கியினால் மாற்றப்படலாம் அல்லது மீளப்பெறப்படலாம்.

**12. கடன் உச்சவரம்பு:**

வங்கி அட்டையுடன் சேர்த்தனுப்பப்படும் முகப்புக் கடிதம் மற்றும் வங்கிக்கூற்று வங்கி அட்டைக் கணக்குக்கு ஏற்புடையதான ஆரம்ப கடன் உச்ச வரம்பைக் காட்டும். வங்கி அட்டை உறுப்பினர், கடன் உச்ச வரம்பைத் தீர்மானிப்பதற்கும் காலத்துக்குக்காலம் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம் அதனை அதிகரிப்பதற்கும் அல்லது குறைப்பதற்கும் இத்தால் சம்மதமளித்து வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

தற்போதைய மீதி கடன் உச்சவரம்பை விஞ்சினால், வங்கி அட்டை உறுப்பினர் ஏதேனும் மிகையை உடனடியாக கொடுப்பனவு செய்தல் வேண்டும். கடன் உச்சவரம்பு விஞ்சப்படின், கடன் உச்சவரம்பு விஞ்சப்படுகின்ற தொகையைப் பொருட்படுத்தாமல் காலத்துக்குக்காலம் ஏற்புடையதாக உச்சவரம்பை விஞ்சியமைக்கான விதிப்பனவொன்று வங்கி அட்டைக் கணக்குக்கு அறவிடப்படும்.

**13. வங்கி அட்டைகள் காலாவதியாதல்:**

வங்கி அட்டையானது, அதன் முகப்பில் அச்சிடப்பட்ட காலாவதித் திகதி வரை செல்லுபடியாகும். வங்கி அட்டையின் செல்லுபடித் தன்மையைப் புதுப்பித்தலானது 5.6 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.

**14. வங்கி அட்டை வங்கியின் ஆதனமாகவிருத்தல்:**

வங்கி அட்டை வங்கியின் ஆதனமாகவுள்ளது. அதனைப் பயன்படுத்துவதற்கான அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் அல்லது எவரேனும் துணைநிலை வங்கி அட்டை உறுப்பினரின் உரிமையை எந்நேரத்திலும் வங்கி இல்லாதொழிக்க முடியும். வங்கியானது இவ்வுரிமையை அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம் பிரயோகிக்கலாம். வங்கியானது, இல்லாதொழிக்கப்பட்ட வங்கி அட்டைகளை “இரத்துச் செய்தல் செய்தி மடலில்” நிரற்படுத்தலாம் அல்லது வங்கி அட்டையானது இல்லாதொழிக்கப்பட்டுள்ளது அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ளது என சேவை நிலையங்களுக்கு வேறு வகையாக அறிவிக்கலாம். வங்கியானது வங்கி அட்டையை இல்லாதொழித்தால், வங்கி அட்டை உறுப்பினர் அதனை வங்கிக்கு திருப்பி ஒப்படைத்தல் வேண்டும். மேலும், சேவை நிலையமொன்று காலாவதியான அல்லது இல்லாதொழிக்கப்பட்ட வங்கி அட்டையொன்றை மீள ஒப்படைக்குமாறு வங்கி அட்டை உறுப்பினர் ஒருவரை வினவினால், வங்கி அட்டை உறுப்பினர் அவ்வாறு செய்தல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினர், வங்கி அட்டை காலாவதியான பின்னர் அல்லது இல்லாதொழிக்கப்பட்ட பின்னர் அதனைப் பயன்படுத்துதல் ஆகாது. வங்கி அட்டை உறுப்பினர், வங்கி அட்டை இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் அல்லது காலாவதியான பின்னர் ஏற்கநேர்ந்த எல்லா

விதிப்பனவுகளுக்கும் தொடர்ந்து பொறுப்பாதல் வேண்டும். வங்கி அட்டையை இல்லாதொழித்தல், மீள் உடைமைகொள்ளல் அல்லது திருப்பி ஒப்படைக்குமாறு கோருதல் வங்கி அட்டை உறுப்பினரின் பண்பு அல்லது நம்பகத்தன்மை மீதான ஏதேனும் பிரதிபலிப்பாக இருப்பதில்லை என்பதுடன் அவ்வாறு பொருளமைத்துக்கொள்ளப்படுதலுமாகாதுளூ அத்துடன் வங்கி அட்டையை திருப்பி ஒப்படைக்குமாறு அல்லது மீள ஒப்படைக்குமாறு கோரி எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றுக்கு வங்கி எவ்வகையிலும் பொறுப்பாதலாகாது. மேலும், வங்கி அட்டையுடன் இணைந்த சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம் வங்கியின் தற்றுணிபில் எந்நேரத்திலும் மீளப்பெறப்படலாம்.

**15. விதிப்பனவுகள்:**

15.1 வங்கி அட்டை உறுப்பினர், வங்கியினால் வெளியிடப்படும் நிலவுகின்ற கட்டண சிற்றேட்டின்படி, வங்கி அட்டை வழங்கப்படும் போது வங்கியினால் விதித்துரைக்கப்பட்டவாறான இணைப்புக்கட்டணமொன்றை மற்றும் ஒவ்வொரு துணைநிலை வங்கி அட்டை வழங்கப்படும் போது வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட இணைப்புக் கட்டணமொன்றை வங்கியின் கோரிக்கையின் மேல் வங்கிக்குச் செலுத்துவதற்கு உடன்படுகின்றார்.

15.2 வங்கி அட்டை உறுப்பினர், (வங்கி அட்டை பயன்படுத்தப்படுகின்றதா அல்லது இல்லையா என்பதனைப் பொருட்படுத்தாமல்) வங்கி அட்டை உறுப்பினருக்கு வங்கி அட்டைக் கணக்கைப் பேணுவதற்கு வருடாந்தக் கட்டணமொன்றை வங்கிக்குச் செலுத்துவதற்கு உடன்படுகின்றார். வருடாந்தக் கட்டணங்கள், அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு வங்கி அறிவிக்கின்றவாறான அத்தகைய வீதங்களில் முற்கூட்டியே பட்டியலிடப்படுதல் வேண்டும்.

15.3 வங்கி அட்டை கடல்கடந்த முகவரியொன்றுக்கு விரைதூதர் சேவை மூலமாக அனுப்பப்படும்போது, வங்கியானது வங்கி அட்டைக் கணக்குக்கு ஒரு கையாளும் கட்டணமொன்றை பற்று வைக்கும்.

15.4 உச்சவரம்பு அதிகரிப்புகளுக்கான ஒரு கையாளும் கட்டணம் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்று வைக்கப்படும்.

15.5 வங்கிக்கூற்றுக்களின் பிரதிகளுக்கான ஒரு கையாளும் கட்டணம் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்று வைக்கப்படும்.

15.6 வங்கி அட்டை உறுப்பினர் கொடுப்பனவுக்குரிய திகதியில் மொத்த நிலுவையை கொடுத்துத்தீர்க்காவிடின், வங்கிக்கூற்றுத் திகதியன்று உள்ள நிலுவையாகவுள்ள மொத்த மீதியுடன் வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் பட்டியலிடும் காலப்பகுதியின் போதான நாளாந்த மீதியின் மீது கணக்கிடப்பட்ட ஒரு நிதி விதிப்பனவொன்றையும் கொண்டிருக்கும். நிதி விதிப்பு அடுத்த அறிக்கைத் தேதியில் அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

15.7 மேலே 15.6 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதி விதிப்பனவின் கொடுப்பனவுக்குப் பங்கமின்றி, வங்கி அட்டை உறுப்பினர் கொடுப்பனவுக்குரிய திகதியில் வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவை / வருமதியாகவுள்ள மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவைச்

செலுத்துவதற்குத் தவறினால், ஒரு தாமதக் கொடுப்பனவுக்கான கட்டணமொன்று அறவிடப்பட்டு வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படும்.

15.8 வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது வேறு எவரேனும் திறத்தவரினால் வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது முன்வைக்கப்பட்ட ஏதேனும் காசோலை அல்லது வேறு கொடுப்பனவுக் கட்டளை எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக ஏற்கமறுக்கப்படின், வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் ஒரு கையாளும் கட்டணத்தை வங்கி அட்டை உறுப்பினரிடம் அறவிட்டு வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைத்தல் வேண்டும். இவ்விதிப்பனவு வங்கியினால் அறவிடப்படக்கூடியவாறான எவையேனும் அஞ்சல் விதிப்பனவுகளுக்கு மேலதிகமாகவிருக்கும்.

15.9 எல்லாப் பண முற்பணங்களின் மீதும் ஒரு பண முற்பணக் கட்டணம் அத்துடன் / அல்லது ஒரு கையாளும் கட்டணம் அறவிடப்பட்டு வங்கியினால் தீர்மானிக்கப்பட வேண்டிய வீதமொன்றில் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படும். பயணிகள் காசோலைகள், கோரிக்கை வரைவுகள், தந்திமுறைப் பரிமாற்றங்கள் முதலியன போன்ற உடனடியாக பணமாக மாற்றப்படத்தக்க வங்கி அட்டையின் மீது கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் சாதனமும் பண முற்பணங்களாக கருதப்படும் என்பதுடன் மேலேயுள்ள விதிப்பனவுக்கு அமைந்ததாகவுமிருக்கும்.

15.10 குறித்தளிக்கப்பட்ட கடன் உச்சவரம்பு பட்டியலிடும் காலப்பகுதியில் ஏதேனும் நேரத்தில் விஞ்சப்படின் உச்சவரம்பை விஞ்சியமைக்கான ஒரு கட்டணம் அறவிடப்பட்டு வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படும். இது பட்டியலிடும் காலப்பகுதி ஒன்றிற்கு ஒரு முறை அறவிடப்படும். கடன் உச்ச வரம்பு விஞ்சியுள்ளதா அல்லது இல்லையா எனக் கணக்கிடும் நோக்கத்துக்காக, எவையேனும் வங்கி விதிப்பனவுகளின் தொகையும் கவனத்திற்கொள்ளப்படும்.

15.11 இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கிடைக்கக்கூடியதாகவுள்ள பெற்றோல், டீசல், வாயு மற்றும் வேறு வழங்கல்கள் ஒரு கையாளும் கட்டணத்துக்கு அமைந்தனவாகவிருக்கும் என்பதுடன் வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படும்.

15.12 விற்பனைகள; / பண முற்பண வரைவுகளின் நகல் பிரதிகளுக்கான ஒரு மீட்புக் கட்டணம் வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படும்.

15.13 காலத்துக்குக்காலம் ஏற்புடையதாகக்கூடிய ஏதேனும் நியதிச்சட்ட விதிப்பனவு (விதிப்பனவுகள்) அது / அவை ஏற்புடையதாகின்றவாறும் ஏற்புடையதாக வருகின்றபோதும் வங்கி அட்டைக் கணக்குக்கு விதிப்பனவு செய்யப்படும்.

15.14 வங்கி அட்டைக்கும் அதன் பயன்பாட்டுக்கும் ஏற்புடையதான நிதி விதிப்பனவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் அத்துடன் விதிப்பனவுகள் பற்றிய விபரங்கள் வங்கியினால் வெளியிடப்படும் கட்டண சிற்றேட்டில் குறிப்பிடப்படுகின்றனளூ அவற்றின் பிரதிகள் இலங்கையில் உள்ள

இவ்வங்கியின் எக்கிளைகளிலும் வங்கி அட்டை நிலையத்திலும் கோரிக்கையின் மீது கிடைக்கக்கூடியதாகவிருக்கும் அல்லது வங்கியின் www.nationstrust.com அல்லது www.americanexpress.lk என்ற வங்கியின் கூட்டிணைப்பு இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். எல்லா விதிப்பனவுகளும், கட்டணங்களும், வட்டி வீதங்களும், குற்றப்பணங்களும் மற்றும் விளிம்புகளும் வங்கியின் தற்றுணிபில் அறிவித்தல் மூலம் மாற்றத்துக்கு அமைந்தனவாகவிருக்கும் என்பதுடன் கட்டணத்துக்கான அத்தகைய எவையேனும் மாற்றங்கள் / சேர்க்கைகள் வங்கிக்கூற்றில் எடுத்துரைப்பு என்ற வகையான அல்லது அதனுடன் இணைப்பதன் மூலம் அல்லது இலங்கையில் வெளியிடப்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செய்தித்தாள்களில் அல்லது வங்கிக் கிளைகளில் உள்ள அறிவித்தல் பலகையில் அத்தகைய மாற்றம; / சேர்க்கை பற்றிய அறிவித்தலை வெளியிடுவதன் மூலம் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிக்கப்படும்.

15.15 வங்கி அட்டை உறுப்பினரின் கோரிக்கையின் பேரில் நிறைவேற்றப்படும் ஏதேனும் மேலதிக சேவைக்கான கட்டணமொன்றை அறவிடுவதற்கும் அத்தகைய கட்டணத்தை வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைப்பதற்குமான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

15.16 காலத்துக்குக் காலம் வங்கியினால் முனையப்படக்கூடியவாறான எவையேனும் கட்டணக் குறைப்புக்கள் அல்லது விட்டுக்கொடுப்புக்கள் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவிப்பதன் மூலம் வங்கியின் தற்றுணிபில் எந்நேரத்திலும் அதனால் மீளப்பெறப்படலாம் அல்லது மட்டுப்படுத்தப்படலாம். வங்கியானது அதன் சொந்தத் தற்றுணிபில் வங்கி அட்டையின் வகை மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து சில விதிப்பனவுகளுக்கு விலக்களிக்கலாம்.

**16. விமானச்சேவை நிலையங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள்:**

வங்கி அட்டையொன்றைப் பயன்படுத்தி விமான பயணச் சீட்டு ஒன்று முற்பதிவு செய்யப்படுகின்றபோது, ஏற்புடையதாயின், எவையேனும் மேலதிக விதிப்பனவுகளுக்கு அமைய பயணச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக பணம் செலுத்துவதற்கு வங்கி அட்டை உறுப்பினர் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அது வங்கிக்கூற்றில் பட்டடியலிடப்படுதலும் வேண்டும். அடுத்துப்பின்னர் இரத்துச்செய்யப்படும் ஏதேனும் பயணச் சீட்டுக்கு, அதற்கான வரவு சேவை நிறுவனத்திடமிருந்து வங்கியினால் பெறப்படுகின்றவாறும் பெறப்படுகின்றபோதும் (இரத்துச்செய்தல் விதிப்பனவுகளைக் கழித்து) வங்கி அட்டைக் கணக்குக்கு அத்தொகை வரவுவைக்கப்படும்.

**17. பிணக்குகள்:**

கொடுப்பனவுக்காக வங்கியினால் சேவை நிலையமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் விதிப்பனவு அல்லது வேறு கொடுப்பனவு தேவைப்பட்டியல், அத்தகைய தேவைப்பட்டியலில் பதியப்பட்ட விதிப்பனவு 24 ஆம் பிரிவின்படி வங்கி அட்டை காணாமல் போயுள்ளவிடத்தும், திருடப்பட்டுள்ளவிடத்தும் மற்றும் அது பற்றி முறையாக வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளவிடத்தும் தவிர வங்கி அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் விடயத்துக்கேற்ப அவ்விதிப்பனவில் அல்லது வேறு தேவைப்பட்டியலில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையிலும் வங்கி அட்டை உறுப்பினரினாலும் சேவை நிலையத்தில் முறையாக ஏற்கநேர்ந்தது என்பதற்கான முழுமையான எண்பிப்பாகவிருத்தல் வேண்டும். வங்கி அட்டை மோசடியான முறையில் பயன்படுத்தப்படுகின்றது என எண்பிக்கும் பொறுப்பு வங்கி அட்டை உறுப்பினர் மீது இருத்தல் வேண்டும். இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு கொடுப்பனவுத் தேவைப்பட்டியல், நானாவித ஹோட்டல் விதிப்பனவுகள் முதலியன போன்ற விதிப்பனவொன்றாக பதியப்படாத வங்கி அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் சேவை நிலையமொன்றில் வங்கி அட்டை உறுப்பினர் ஒருவரினால் ஏற்கநேர்ந்த அனுமதிக்கத்தக்க செலவுகள் தொடர்பான எவையேனும் மற்றும் எல்லாக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்குதல் வேண்டும்.

அத்தகைய விதிப்பனவுச் சீட்டில் குறிப்பிடப்பட்ட வங்கி அட்டை இலக்கத்துடன் சேர்த்து அதன் மீதுள்ள வங்கி அட்டை உறுப்பினரின் கையொப்பம் வங்கி அட்டை உறுப்பினரினால் ஏற்கநேர்ந்த பொறுப்பின் அளவுக்கு வங்கிக்கும் வங்கி அட்டை உறுப்பினருக்கும் இடையிலான முழுமையான சான்றாக இருத்தல் வேண்டும் என்பதுடன் வங்கி அட்டை உறுப்பினர் தனது திருப்திக்கு கொள்வனவு செய்யப்பட்ட / கொள்வனவு செய்யப்படவேண்டிய பண்டங்களை உரிய முறையில் பெற்றுள்ளார் அல்லது பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படவேண்டிய சேவையை உரிய முறையில் பெற்றுள்ளார் என உறுதிப்படுத்துவதற்கு வங்கி தேவைப்படுத்தப்படுதலாகாது. வங்கி அட்டை உறுப்பினர் வங்கிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட ஒரு விதிப்பனவுடன் உடன்படாவிட்டால், அதுபற்றி வங்கிக்கூற்றைப் பெற்றதிலிருந்து 20 நாட்களினுள் வங்கிக்குச் சென்றடையும் வகையில் அறிவிக்கப்படுதல் வேண்டும், தவறும்பட்சத்தில் எல்லா விதிப்பனவுகளும் வங்கிக்கூற்றுகளும் முழுமையாக ஒழுங்கில் உள்ளது என பொருளமைத்துக்கொள்ளப்படும். வங்கியானது, உடன்பாடின்மை பற்றிய அறிவித்தலைப் பெற்றதன் மீது இவ்வங்கிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ஏற்புடையதான விதிப்பனவுடன் இன்னலுற்ற வங்கி அட்டை உறுப்பினரின் உடன்பாடின்மை ஒன்றைத் தீர்ப்பதற்கு நல்லெண்ணத்துடனும் வர்த்தகரீதியில் நியாயமானதுமான முயற்சிகளை எடுத்தல் வேண்டும். அத்தகைய முயற்சியின் பின்னர், வங்கிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட விதிப்பனவு சரியானது என வங்கி தீர்மானிப்பின், அப்போது, விதிப்பனவுச் சீட்டு அல்லது கொடுப்பனவு தேவைப்பட்டியலின் பிரதியொன்று உட்பட விபரங்களுடன் சேர்த்து அதனை வங்கி அட்டை உறுப்பினருக்கு வங்கி அறிவித்தல் வேண்டும். அதன் பின்னர் வங்கி அட்டை உறுப்பினர் வட்டி மற்றும் வேறு எவையேனும் ஏற்புடையனவான விதிப்பனவுகள் உட்பட ஆட்சேபனையின்றி கொடுப்பனவைச் செய்தல் வேண்டும் / வங்கியானது வங்கிக்கு

வருமதியாகவுள்ள அத்தகைய கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். பிணக்கிலுள்ள கொடுக்கல்வாங்கல்கள் காரணமாகவுள்ள மீளளிப்புக்கள் அல்லது நேர்மாற்றங்கள் உட்பட கொடுக்கல்வாங்கல் ஒன்றை இரத்துச்செய்தல், நேர்மாற்றல் அல்லது மீளளித்தல் என்பவற்றிலிருந்து ஏற்படக்கூடிய ஏதேனும் பரிமாற்ற இழப்புக்கு வங்கி அட்டை உறுப்பினர் பொறுப்பாவார்.

**18. வங்கி அட்டையை ஏற்கமறுத்தல்:**

வங்கி அட்டையானது ஏதேனும் குறிப்பிட்ட சேவை நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் என வங்கி உத்தரவாதம் வழங்காது என்பதுடன் வங்கி அட்டையை ஏற்றுக்கொள்வதற்கு ஏதேனும் சேவை நிலையம் மறுப்பதற்கான பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாது.

**19. பெயர் மற்றும் முகவரியை மாற்றுதல்:**

அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் 30.3 ஆம் பிரிவில் தரப்பட்டவாறான முறையில் பெயர் அல்லது முகவரியிலான ஏதேனும் மாற்றத்தை வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

**20. பண்டங்கள் மற்றும் சேவைகளின் தரம்:**

வங்கி அட்டை உறுப்பினரினால் அஞ்சற் கட்டளை மூலம் இடப்பட்ட பண்டங்களை ஒப்படைப்பதில் உள்ள தாமதம், அவற்றை ஒப்படைக்காமை, மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்ளாமை அல்லது குறைபாடுள்ள பண்டங்களைப் பெற்றுக்கொள்ளல் காரணமானவை உட்பட சேவை நிலையங்களில் வங்கி அட்டை உறுப்பினரினால் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட வணிகப் பொருட்கள், பொறுப்புறுதி அல்லது சேவைகளுக்கு வங்கியானது எவ்வகையிலும் பொறுப்பாதலாகாது. வங்கி அட்டை வசதியானது பண்டங்களை கொள்வனவு செய்வதற்கான அல்லது சேவைகளை பயன்படுத்துவதற்கான வங்கி அட்டை உறுப்பினருக்குள்ள ஒரு முற்றிலும்வசதியாகும் எனவும் வங்கியானது பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பாக தரம், தொகை, ஒப்படைப்பு அல்லது எவ்வகையினதுமாக வேறு வகையாக எந்தவித பொறுப்புறுதியையும் கொண்டிருக்காது எனவும் அல்லது எவ்வித பிரதிநிதித்துவத்தையும் செய்யாது எனவும் வங்கி அட்டை உறுப்பினரே ஏதேனும் பிணக்கை சேவை நிறுவனத்துடன் தீர்த்துக் கொள்ளல் வேண்டும் எனவும் தெளிவுற விளங்கிக்கொள்ளப்படுதல் வேண்டும். பிணக்கொன்று உள்ளதானது வங்கி அட்டை உறுப்பினரை விடுவிக்காது என்பதுடன் பிணக்கு அல்லது எத்தகையதுமான உரிமைக்கோரிக்கை முடிவுறாதுள்ள நிலையில் வங்கிக்கான அவரது எவையேனும் ஆட்சேபனைகள்

எவ்வாறிருப்பினும் அத்தகைய விதிப்பனவுகளை உடனடியாகச் செலுத்துவதற்கும் உடன்படுகின்றார்.

**21. வங்கி அட்டை உறுப்பினர்களுக்கான காப்புறுதிப் பாதுகாப்பு:**

வங்கியானது, அதன் தற்றுணிபில் காலத்துக்குக் காலம் பல்வேறு காப்புறுதித் தயாரிப்புக்களை வங்கி அட்டை உறுப்பினர் ஒருவருக்கு வழங்கலாம். எவ்வாறாயினும், அத்தகைய காப்புறுதியின் மீதான எவையேனும் உரிமைக்கோரிக்கைகள் அத்தகைய காப்புறுதியை வழங்கும் காப்புறுதிக் கம்பெனிக்கு நேரடியாகச் செய்யப்படுதல் வேண்டும். காப்புறதியின் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படாமைக்கு அல்லது அத்தகைய காப்புறுதியிலிருந்து எழக்கூடிய வேறு பிணக்குக்கு வங்கி பொறுப்பாதலாகாது என்பதுடன் அத்தகைய எவையேனும் பிரச்சினைகள் வங்கி அட்டை உறுப்பினருக்கும் காப்புறுதிக் கம்பெனிக்கும் இடையில் தீர்க்கப்படுதல் வேண்டும். எல்லா ஏற்புடையதான காப்புறுதிகளும் காலத்துக்குக்காலம் வங்கியினால் அறிவிக்கப்படலாம், அவை வங்கியின் தற்றுணிபில் திருத்தப்படலாம் அல்லது திரிபுபடுத்தப்படலாம். காப்புறுதிக் கம்பெனியினால் தீர்மானிக்கப்பட்டவாறான தனிவேறான நியதி நிபந்தனைகள் பல்வேறு காப்புறுதிப் பத்திரங்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும். நியதி நிபந்தனைகளுடனான பத்திரங்கள் கோரிக்கையின் மீது அனுப்பப்படுதல் வேண்டும்.

**22. பொறுப்பிலிருந்து தவிர்ந்துகொள்ளல்:**

1. வங்கியானது பின்வருவனவற்றிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாக எழுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் வங்கி அட்டை உறுப்பினருக்கு எத்தகையதுமான பொறுப்பின் கீழும் இருத்தலாகாது.

(அ) வணிகர் ஒருவரினால் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகளில் உள்ள எவையேனும் குறைபாடுகள்,

(ஆ) எவரேனும் ஆள் வங்கி அட்டை ஒன்றை ஏற்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தல்,

(இ) ஏதேனும் கணினி முனையத்தின் அத்துடன் / அல்லது EDC இயந்திரத்தின் பிறழ்செயற்பாடு,

(ஈ) வங்கி அட்டை உறுப்பினர் அல்லாத ஒருவரினால் கொடுக்கல்வாங்கல்

அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல்,

(உ) வங்கி அட்டையை திருப்பி ஒப்படைக்குமாறு கோரும் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று அல்லது அத்தகைய கோரிக்கையொன்றுடன் இணைந்து எவரேனும் ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் செயல்,

(ஊ) வங்கியின் பெயர்குறிக்கப்பட்ட ஊழியர்கள் தவிர்ந்த எவரேனும் ஆளுக்கு வங்கி அட்டை உறுப்பினர் வங்கி அட்டையைக் கையளித்தல்,

(எ) வங்கி அட்டையின் முகப்பில் பொறிக்கப்பட்ட காலாவதித் திகதிக்கு முன்னர் வங்கி அட்டையைக் கோருவதற்கும் மீள ஒப்படைப்பதனைச் செய்விப்பதற்குமான வங்கியின் உரிமை, அத்தகைய கோரிக்கை மற்றும் மீள ஒப்படைத்தல் நேரடியாக வங்கியினால் அல்லது சேவை நிறுவனமொன்றினூடாக அல்லது வங்கியின் முகவர் ஒருவரினூடாக செய்யப்படுகின்றதாயினும் அத்துடன் / அல்லது செய்விக்கப்படுகின்றதாயினும் சரி, வங்கியினால் பிரயோகிக்கப்படுதல்ளூ

(ஏ) ஏதேனும் வங்கி அட்டையை அல்லது வங்கி அட்டைக் கணக்கை முடிவுறுத்துவதற்கான வங்கியின் உரிமையை வங்கி பிரயோகித்தல்,

(ஐ) வங்கி அட்டையின் மீள் உடைமை அத்துடன் / அல்லது அதனை திருப்பி ஒப்படைக்குமாறு கூறும் ஏதேனும் கோரிக்கை அல்லது வங்கி அட்டையை ஏற்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு ஏதேனும் சேவை நிலையம் மறுப்பதினால் விளைவிக்கப்பட்டதாகச் சார்த்தப்படுகின்ற வங்கி அட்டை உறுப்பினரொருவரின் கடன் தன்மைக்கும் நன்மதிப்பும் ஏற்படுத்தப்படும் ஏதேனும் ஊறு,

(ஒ) 23 ஆம் பிரிவைப் பின்பற்றி வங்கியினால் வெளிவிடப்பட்ட எவையேனும் விபரங்களில் ஏதேனும் பிறழ்கூற்று, பிறழ்பிரதிநிதித்துவம், பிழை அல்லது விட்டுவிடுகை,

(ஓ) எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக விதிப்பனவொன்றை மறுத்தல்,

2. வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து நிலுவையாகவுள்ள வருமதிகளை கொடுத்துத்தீர்ப்பதற்கான கோரிக்கை அல்லது உரிமைக்கோரிக்கையொன்று ஒன்றில் வங்கியினால் அல்லது வங்கி சார்பாக செயலாற்றும் எவரேனும் ஆளினால் செய்யப்படுகின்ற பட்சத்தில், அத்தகைய கோரிக்கை அல்லது உரிமைக்கோக்கை வங்கி அட்டை உறுப்பினரின்

பண்புக்கு அவதூறான செயல் ஒன்றாக அல்லது பங்கமான செயலொன்றாக அல்லது அவரது பண்பை பிரதிபலிப்பதாக கருதப்படுதலாகாது.

3. பல்வேறு சேவைகளுக்கான தொடர்பாடல்களும் ஒழுங்கேற்பாடுகளும் மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர் ஒருவரினால் அத்துடன் / அல்லது அத்தகைய மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநரின் ஒப்பந்தக்காரர்களினால் வழங்கப்படுவதுடன் அவற்றுக்கு ஒன்றில் அத்தகைய மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநரினால் அல்லது வங்கியினால் பணம் செலுத்தப்படுகின்றது. பயன்படுத்தப்பட்ட அத்தகைய எவையேனும் மற்றும் எல்லா சேவைகளின் செலவுக்கும் வங்கி அட்டை உறுப்பினர் பொறுப்பாவார். உதவியானது மிகச்சிறந்த முயற்சி என்ற அடிப்படையில் வழங்கப்படுவதுடன் நேரம், தூரம் அல்லது அமைவிடங்கள் பற்றிய பிரச்சினைகள் காரணமாக கிடைக்கக்கூடியதாகவுமிருக்காது. மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர்களினால் முன்மொழியப்பட்ட அத்துடன் / அல்லது பெயர்குறிக்கப்பட்ட காப்புறுதி, மருத்துவ அத்துடன் / அல்லது சட்ட உயர் தொழிலர்கள் அவர்களது ஊழியர்களோ அல்லது மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநரின் ஒப்பந்ததாரர்களின் ஊழியர்களோ அல்ல. ஆகவே, அவர்கள் ஏதேனும் காப்புறுதி, மருத்துவ, சட்ட அல்லது வேறு எவையேனும் சேவைகளின் கிடைக்கக்கூடிய தன்மை, பயன்பாடு, செயல்கள் விட்டுவிடுகை அல்லது விளைவுகளுக்குப் பொறுப்பானவர்களல்லர். மேலே குறிப்பிடப்பட்ட திறத்தவர்கள் எவரினதும் வழங்கப்பட்ட சேவைகளின் ஒழுங்கேற்பாடு அல்லது பயன்பாட்டுக்கு அல்லது செயல்களுக்கு அல்லது செய்யாமைகளுக்கு எத்தகையதுமான தன்மையிலான ஏதேனும் பொறுப்புடைமையை அல்லது பொறுப்பை வங்கி ஏற்காது.

**23. தகவல்களை வெளிவிடுதல்:**

இவ்விருபத்து மூன்றாம் பிரிவில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறு அமைய, சட்டத்தினால் தேவைப்படுத்தப்படுகின்ற அளவுக்கு வங்கி அட்டை உறுப்பினருக்கும் வங்கிக்கும் இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது விவகாரங்கள் பற்றிய எல்லா விபரங்களினதும் இரகசியத்தன்மையை வங்கி பேணிக்காத்தல் வேண்டும். முற்போந்தவை எவ்வாறிருப்பினும், வங்கி அட்டை உறுப்பினர் அத்துடன் ∴ அல்லது வங்கி அட்டைக் கணக்கு பற்றிய விபரங்களை வங்கி பின்வருவனவற்றிற்கு வழங்குவதற்கு இத்தால் சம்மதமளித்து அதிகாரமளிக்கின்றார்:

அ) ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது கடன் பணியகம் அல்லது கடன் பணியகமொன்றை அல்லது தவறுகின்ற வாடிக்கையாளர்களின் தரவுத்தளத்தை முகாமைசெய்கின்ற பொதுவான சேவை வழங்குநர்,

ஆ) இவ்வுடன்படிக்கை அல்லது வங்கி அட்டைக் கணக்கு தொடர்பாக வங்கியின் எவரேனும் உண்மையான அல்லது முன்மொழியப்பட்ட குறித்தளிக்கப்பட்டவர் அல்லது அதில் பங்குபற்றுபவர் அல்லது உப பங்குபற்றுபவர் அல்லது அது தொடர்பாக வங்கியின் எவையேனும் உரிமைகள் கைமாற்றப்பட்டவர்,

இ) வங்கிக்கு அல்லது ஏதேனும் தொடர்பான கம்பெனிக்கு இரகசியத்தன்மை பேணும் கடமையொன்றின் கீழ் உள்ள எவரேனும் முகவர், ஒப்பந்ததாரர் அல்லது சேவை வழங்குநர்,

ஈ) எவரேனும் மேற்பார்வை செய்யும் அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரி,

உ) இலங்கையின் சட்டங்களுக்கிணங்க அவ்வாறு செய்வதற்கு கட்டளையிடப்பட்ட போதான எவரேனும் ஒருவர்,

ஊ) வர்த்தகப் பயன்பாட்டுக்காக வங்கியுடன் இணைந்த ஏதேனும் கம்பெனியின் ஏதேனும் அலுவலகம் அல்லது கிளைளூ அல்லது

எ) அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனி அல்லது அதன் எவையேனும் இணைந்த கம்பெனிகள் அல்லது அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனியின் தற்றுணிபில் வேறு எவரேனும் திறந்தவர்.

**24) காணாமல் போன வங்கி அட்டைக்கான பொறுப்பு:**

24.1 வங்கி அட்டையொன்று காணாமல் போயின் அல்லது திருடப்படின், வங்கி அட்டை உறுப்பினர் உடனடியாக இலங்கையில் உள்ள வங்கி அட்டை நிலையத்துக்கு அறிவித்தல் வேண்டும். காணாமல்போதல் / திருட்டு நிகழ்கின்றவிடத்து உள்நாட்டு காவல்துறை / சட்ட வலுவுறுத்துகை முகவராண்மைக்கு வங்கி அட்டை உறுப்பினர் அறிக்கை ஒன்றை கோப்பிடுதலும் வேண்டும்.

இலங்கையில் உள்ள வங்கி அட்டை நிலையத்திற்கு காணாமல் போனமை பற்றி அறிவிக்கப்படும் வரை வங்கி அட்டை மீது ஏற்கநேர்ந்த விதிப்பனவுகளுக்கு வங்கி அட்டை உறுப்பினர் பொறுப்பாவார். வங்கி அட்டை உறுப்பினர், வங்கி அட்டையின் மறுபக்கத்தில் அச்சிடப்பட்டுள்ள வங்கியின் வாடிக்கையாளர் சேவை நிலைய இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, அதன் பின்னர் வங்கி அட்டை காணாமல் போனமையை உறுதிப்படுத்தியும் விதிப்பனவுகள் எவையேனுமிருப்பின் அவற்றை பொறுப்புத்துறந்தும் நொத்தாரிசு மூலம்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியின் பிரதியொன்றை வங்கி அட்டை நிலையத்துக்கு அனுப்புவதன் மூலமும் காணாமல் போன இடத்து உள்நாட்டு காவல்துறை அதிகாரிகள் / சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளுக்கு முறைப்பாடுசெய்த அறிக்கையின் கையொப்பமிடப்பட்ட பிரதியொன்றை வங்கிக்கு அனுப்புவதன் மூலமும் உரிய முறையில் ஆதாரப்படுத்தப்பட்டு வங்கி அட்டை காணாமல் போனமை பற்றி அறிக்கையிடலாம். வங்கியானது, போதிய சரிபார்த்தலின் மேல், வங்கி அட்டைக் கணக்கை தற்காலிகமாக இடைநிறுத்தலாம் என்பதுடன் இக்கணக்கின் மீது வங்கி அட்டை உறுப்பினருக்கு விளைவிக்கப்பட்ட ஏதேனும் அசௌகரியத்துக்கு பொறுப்பாதலும் ஆகாது. மாற்றுவழியாக, வங்கி அட்டை உறுப்பினர் வங்கியின் மொபைல் பாங்கிங் ∴ ஒன்லைன் பாங்கிங் செயலி மூலம் வங்கி அட்டைக் கணக்கை முடக்கலாம். வங்கி அட்டைக் கணக்கு முடக்கப்படுகின்றது என உறுதிப்படுத்தி சொல்லப்பட்ட செயலியினூடாக வழங்கப்படும் செய்தி அதுதொடர்பில் வங்கியினாலான போதிய உறுதிப்படுத்துகையாகவிருக்கும்இலங்கையில் உள்ள வங்கி அட்டை நிலையத்துக்கு பயனுள்ள அறிவித்தல் வழங்கப்படும் வரை அல்லது மேற்கூறப்பட்ட முறையில் வங்கி அட்டை உறுப்பினரினால் வங்கி அட்டைக் கணக்கு முடக்கப்படும் வரை வங்கி அட்டையின் அதிகாரமளிக்கப்படாத பயன்பாட்டின் விளைவாக, வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்பட்ட எல்லாத்தொகைகளுக்கும் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைப்பதற்கு இன்னும் முடிவுறாதுள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கும் வங்கி அட்டை உறுப்பினர் பொறுப்பாதல் வேண்டும். வங்கி அட்டையொன்று காணாமல் போனதாக, திருடப்பட்டதாக அல்லது சேதமாக்கப்பட்டதாக அறிக்கையிடப்படும் போது, அவ்வங்கி அட்டை பின்னர் கண்டுபிடிக்கப்படினும் கூட, அதே வங்கி அட்டையைப் பயன்படுத்துவதற்கு வங்கி அனுமதி வழங்கியிருந்தாலொழிய வங்கி அட்டை மீண்டும் பயன்படுத்தப்படுதலாகாது. வங்கி அட்டை உறுப்பினர் வங்கியின் அனுமதியின்றி வங்கி அட்டையைப் பயன்படுத்துகின்ற பட்சத்தில், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் ஏற்க மறுக்கப்படலாம். வங்கி அட்டையொன்று காணாமல் போனதாக, திருடப்பட்டதாக அல்லது சேதப்படுத்தப்பட்டதாக அறிக்கையிடப்பட்டு அதன் பின்னர் கண்டுபிடிக்கப்படின், அதனை வங்கிக்கு மீள ஒப்படைப்பதன் மூலம் வங்கி அட்டையை செல்லுபடியற்றதாக்குவதற்கு வங்கி அட்டை உறுப்பினர் முழுமையாக பொறுப்பாதல் வேண்டும் என வங்கி அட்டை உறுப்பினர் வெளிப்படுத்துகின்றார். வங்கி அட்டை உறுப்பினர் எல்லா நேரங்களிலும் வங்கி அட்டையின் பாதுகாப்பிற்குப் பொறுப்பாக இருக்கின்றார் என்பதுடன் அதனை உறுதிப்படுத்துவதை நோக்கியே எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் கேள்விக்குட்படுத்தப்படக்கூடிய வகையில் உள்ளன என வங்கி தீர்மானிக்கின்ற பட்சத்தில், அது வங்கி அட்டைக் கணக்கை இரத்துச் செய்யலாம்.

24.2 வங்கி அட்டை காணாமல் போதல், திருடப்படுதல் அல்லது அதன் பிறழ்பயன்பாட்டுச் சூழ்நிலைகள் பற்றிய வங்கி அட்டை உறுப்பினரின் உடைமையில் உள்ள எல்லாத் தகவல்களையும் வங்கி அட்டை உறுப்பினர் வங்கிக்கு வழங்குவார் என்பதுடன் காணாமல் போன

வங்கி அட்டையை மீளப்பெறுவதில் உதவுவதற்கு வங்கியினால் அவசியமானது எனக் கருதப்படுகின்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பார்.

24.3 காணாமல் போன வங்கி அட்டை தொடர்பில், வங்கியானது, வணிகர் வலையமைப்புக்கு அறிவிப்பதிலான நிர்வாகச்செலவுகளை மேவுவதற்கான விதிப்பனவொன்றை அறவிடும்.

24.4 வங்கி அட்டை காணாமல் போனதை அல்லது திருடப்படுவதைத் தொடர்ந்து வங்கி அட்டை உறுப்பினருக்கு மாற்றீட்டு வங்கி அட்டையொன்றை வழங்குவதற்கு எக்கடப்பாட்டின் கீழும் வங்கி இருக்காது. ஏதேனும் மாற்றீட்டு வங்கி அட்டையானது வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் வங்கி அட்டைக் கணக்குக்கு பற்றுவைக்கப்படவேண்டிய கையாளும் கட்டணமொன்றுக்கு அமைந்ததாகவிருக்கும் என்பதுடன் மூல வங்கி அட்டை என்றவாறு அதே நியதி நிபந்தனைகளின் கீழ் வங்கி அவ்வாறு தீர்மானிக்கின்றவிடத்து வழங்கப்படுதலும் வேண்டும்.

24.5 PIN அத்துடன் / அல்லது T-PIN காணாமல் போகின்ற, திருடப்படுகின்ற அல்லது வேறெவரேனும் திறத்தவருக்கு வெளிவிடப்படுகின்ற பட்சத்தில், வங்கி அட்டை உறுப்பினர் 24.1 மற்றும் 24.2 ஆகிய பிரிவுகளில் உள்ளவாறு அது பற்றிய விபரங்களுடன் சேர்த்து அத்தகைய காணாமல் போனமை அல்லது வெளிவிடுகை பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

**25. கொடுப்பனவு:**

25.1 வங்கிக்கூற்றானது வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவைக் காட்டும். இத்தொகை, வங்கிக்கூற்றில் நிலுவையாகவுள்ள மொத்தத்தின் சதவீதமொன்றாக அல்லது மட்ட விதிப்பனவு வீதமொன்றாக (இவற்றுள் எது அதிகமாகவுள்ளதோ அதுவாக) காலத்துக்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும். வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவானது, கொடுப்பனவுக்குரிய திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வங்கி அட்டை உறுப்பினரினால் வங்கிக்கு வருமதியாகவும் செலுத்தப்படக்கூடியதாகவும் உள்ளதாகும்.

வங்கி அட்டைக் கணக்கு தவணை கடந்ததாகவிருப்பின் அல்லது கடன் உச்சவரம்பு விஞ்சுவதாகவிருப்பின், வங்கி அட்டை உறுப்பினர் அதனை வங்கிக்கு உடனடியாகச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுவார் என்பதுடன் அதுபற்றி வங்கிக்கூற்றில் அறிவிக்கப்படும். வங்கிக்கு வங்கி அட்டை உறுப்பினரினாலான கொடுப்பனவு, வருமதியாகவுள்ள குறைந்தபட்ச கொடுப்பனவை விட மேலதிகமாக இருக்கலாம் அல்லது கொடுப்பனவுக்குரிய திகதிக்கு முன்னர் செய்யப்படலாம் அல்லது பட்டியலிடும் காலப்பகுதியின் போது உள்ளதை விட அதிகமாக

இருக்கலாம். வங்கிக்கான அத்தகைய கொடுப்பனவுகள் வங்கிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட முறையில் இலங்கை ரூபாவில் செலுத்தப்படுதல் வேண்டும்.

25.2 வங்கி அட்டை உறுப்பினர் வங்கிக்கூற்றைப் பெற்றுக்கொண்டதன் மேல், ஆகக்குறைந்தது வங்கிக்கூற்றில் விபரிக்கப்பட்ட வருமதியாகவுள்ள மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவுத் தொகையை வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினரினால் வங்கிக்கூற்று பெறப்படுவதன் மேல் வருமதியாகவுள்ள மொத்த குறைந்தபட்ச கொடுப்பனவை வங்கிக்குச் செலுத்துவதற்கு ஒவ்வொரு துணைநிலை வங்கி அட்டை உறுப்பினரும் வங்கி அட்டை உறுப்பினருடன் கூட்டாகவும் தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

25.3 இந்நியதி நிபந்தனைகளில் உள்ள எதுவும், சட்டத்தின் கீழ் அல்லது வங்கிக்கும் வங்கி அட்டை உறுப்பினருக்கும் இடையில் நிலவுகின்ற காலத்துக்குக் காலம் செய்துகொள்ளப்படுகின்ற வேறு ஏதேனும் உடன்படிக்கையைப் பின்பற்றி பணங்களை எதிரீடு செய்வதற்கான, கைமாற்றுவதற்கான மற்றும் பயன்படுத்துவதற்கான வங்கியின் உரிமையைப் பாதித்தலாகாது. வங்கி அட்டைக் கணக்குகள் சோந்தையின் கீழ் வங்கிக்கு வைத்திருக்கப்பட்ட வைப்பொன்றின் ஆதாரத்துக்கெகிராக திறக்கப்பட்டுள்ளவிடத்தும் கொடுப்பனவுகள் நிலுவையாக / வருமதியாக உள்ளவிடத்தும், வைப்பின் வரும்படிகள் வங்கி அட்டைக் கணக்கில் உள்ள நிலுவைகளுக்கு எதிராக சரி செய்யப்படும்.

25.4 வங்கி அட்டை உறுப்பினரின் பொறுப்புக்கள் தொடர்பில் வங்கிக்கான கொடுப்பனவுகள், இயைபான அனுமதிக்கப்பட்ட நிதிகள் வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றவாறான அத்தகைய நேரம் வரை செலுத்தப்பட்டிருந்திருக்கவில்லை எனக் கருதப்படுதல் வேண்டும்.

25.5 இந்நியதி நிபந்தனைகளின் கீழ் வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தொகைகளும் ஏதேனும் சட்ட வரையறை, எவரேனும் வங்கி அட்டை உறுப்பினரின் இயலாமை அல்லது ஆற்றலின்மை எவ்வாறிருப்பினும் வங்கி அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது வருமதியாகவுள்ளதாக சார்த்தப்படுகின்ற அல்லது நிலுவையாகவுள்ள ஏதேனும் தொகையை எதிரீடுசெய்தல் அல்லது எதிர் கோரிக்கை என்ற வகையாக அல்லது வேறுவகையாக எத்தகையதுமான ஏதேனும் குறைப்பு இன்றி செலுத்தப்படுதல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினருக்குச் சொந்தமானதும் வங்கியின் உடைமை, கட்டுப்பாடு அல்லது தத்துவத்தில் அல்லது அவற்றின் கீழ் உள்ளனவுமான சொத்துக்கள் / பணங்கள் / வைப்புக்கள்/ பிணைப்பொறுப்புக்கள் எல்லாவற்றின் மீதும் பொதுவான சோந்தையொன்றை வங்கி கொண்டிருத்தல் வேண்டும்.

25.6 செலுத்தப்படத்தக்க வட்டித்தொகையுடன் சேர்த்து, மேலே உடன்பட்டுக்கொள்ளப்பட்டவாறு உரிய திகதியில், வங்கி அட்டையின் கீழ் அல்லது அது தொடர்பில் செலுத்தப்படத்தக்க எல்லா

தவணைகடந்த தொகைகளையும் அறவிடுவதற்கென, வங்கியின் தற்றுணிபில் வங்கியில் வங்கி அட்டை உறுப்பினரினால் பேணப்படும் நடைமுறைக் கணக்குகள், சேமிப்புக் கணக்குகள், நிலையான வைப்புக் கணக்குகள் அத்துடன் / அல்லது வேறு எவையேனும் கணக்குகள் எவற்றுக்கும் பற்றுவைப்பதற்கு வங்கி அட்டை உறுப்பினர் இத்தால் இல்லாதொழிக்கமுடியாத வகையில் சம்மதமளித்து வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். வங்கிக்கு வழங்கப்பட்ட அத்தகைய கட்டற்ற உரிமை மற்றும் இல்லாதொழிக்கமுடியாத அதிகாரத்தை பிரயோகிக்கும் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வங்கி அட்டை உறுப்பினரினால் வங்கியின் மீது வரையப்பட்ட காசோலைகள், கோரிக்கைகள் அல்லது மீளப்பெறுகைகள் அல்லது அது போன்ற வேறு ஆவணங்களை ஏற்கமறுக்கும் அல்லது மறுக்கும் அளவுக்கு அத்தகைய உரிமை அல்லது அதிகாரம் வங்கியினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வங்கியின் அத்தகைய நடவடிக்கையைப் பின்பற்றி வங்கிக்கு எதிராக செய்யப்படக்கூடிய உரிமைக் கோரிக்கைகள் அல்லது கோரிக்கைகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு வங்கி அட்டை உறுப்பினர் இத்தால் உடன்படுகின்றார். தவணைகடந்த தொகையை அறவிடுவதற்கு வசதியளிப்பதற்கு, இயைபான கணக்கில் உள்ள நிதிகளின் தேவைப்படுத்தப்பட்ட தொகையின் மீது வைத்திருப்பொன்றைச் செய்வதற்கு வங்கி அட்டை உறுப்பினர் மேலும் சம்மதமளித்து வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

25.7 பண்டங்கள் அத்துடன் ∴ அல்லது சேவையின் வழங்கல் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் கடன், வங்கிக்கு ஏற்றுக்கொள்ளத்தக்கதான படிவமொன்றில் வங்கி அட்டை நிலையம் அறிவித்தலை பெற்றுக்கொண்டதன் பின்னர் மட்டுமே வங்கியினால் வங்கி அட்டை கணக்குக்கு ஏற்புடையதாக்கப்படும்.

25.8 கொடுப்பனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் காசோலையொன்று ஏதேனும் காரணத்துக்காக உண்டியல் ஏற்கும் வங்கியினால் திருப்பி ஒப்படைக்கப்படுகின்ற பட்சத்தில், சட்டத்தின் கீழ் ஏற்புடையதாகவிருக்கக்கூடிய குற்றவியல் நடவடிக்கைமுறைகளுக்கு வங்கி அட்டை உறுப்பினர் பொறுப்பாதல் வேண்டும்.

25.9 வங்கி அட்டை உறுப்பினரின் இறப்பு, கடனிறுக்க வகையற்ற நிலை அல்லது தொழில் ஒடுக்கப்படுகின்ற பட்சத்தில், வங்கி அட்டைக் கணக்கில் நிலுவையாகவுள்ள முழுமையான வருமதிகள் வங்கி அட்டை உறுப்பினரினால், அவரது அடுத்துறுநர்களினால் அல்லது சாட்டுநர்களினால் முழுமையாக செலுத்தப்படுததாதல் வேண்டும். மீளக் கொடுப்பனவு செய்யும் பொறுப்பு வங்கி அட்டை உறுப்பினரின் தொழில்தருநரினால் பொறுப்பேற்கப்படுகின்ற பட்சத்திலும் அத்தகைய தொழில்தருநரின் தொழில் ஒடுக்கப்படுகின்ற அல்லது அவர் வங்கி முறிந்தவராக வருகின்ற அல்லது எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக கடனிறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்தப்படுகின்ற பட்சத்திலும், அத்துடன் ∴ அல்லது அத்தகைய கொடுப்பனவைச் செய்வதற்கு தொழில்தருநருக்கு இயலாதவிடத்து, வங்கி அட்டை உறுப்பினர் வங்கியின் பூரண

திருப்திக்கு எல்லா வருமதிகளையும் கொடுத்துத்தீர்ப்பதற்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாதல் வேண்டும்.

25.10 வங்கிக்கூற்று பெற்றுக்கொள்ளப்படாமையானது விதிப்பனவுகளை உரிய நேரத்தில் கொடுப்பனவு செய்யாமைக்கான போதிய காரணமாக வங்கி அட்டை உறுப்பினரினால் பொருளமைத்துக்கொள்ளப்படுதலாகாது. எத்தகையதுமான ஏதேனும் காரணத்துக்காக வங்கிக் கூற்றைப் பெற்றுக்கொள்ளாத பட்சத்தில், அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் தனது சமீபத்திய மீதியை அத்துடன் ∴ அல்லது வங்கிக் கூற்றின் இணைப்பிரதியைக் கோருவதற்கும் ஏற்புடையதான எல்லா விதிப்பனவுகளினதும் மொத்தத் தொகையை வங்கிக்குச் செலுத்துவதற்கும் 30.3 ஆம் பிரிவில் தரப்பட்ட முறையில் வங்கியைத் தொடர்புகொள்வதற்கு பொறுப்பேற்கின்றார்.

25.11 வங்கியானது கொடுப்பனவைப் பெற்று அதனை வங்கி அட்டைக் கணக்குக்கு வரவுக்கு வைக்கும் போது மட்டுமே கொடுப்பனவு இடம்பெறுகின்றது, வங்கி அட்டை அதனை அனுப்பும் போது அல்ல. எவையேனும் பண வைப்புக்கள் அவை வங்கி அட்டைக் கணக்குக்கு வரவுவைக்கப்படுவதன் மீது மட்டுமே வங்கியினால் பெறப்பட்டுள்ளதாக கருதப்படலாம். காசோலை வைப்பொன்று வங்கியினால் தீர்வைசெய்யப்பட்டு பெறப்பட்ட வரும்படிகள் வங்கி அட்டைக் கணக்குக்கு வரவுவைக்கப்படும் வரை அக்காசோலை கொடுப்பனவொன்றாகக் கருதப்படுதலாகாது.

25.12 வங்கி அட்டை உறுப்பினரின் நிலுவையாகவுள்ள வங்கி அட்டைப் பட்டியலின் சதவீதமொன்றை கொடுப்பனவுக்குரிய திகதியில் வங்கி அட்டைக் கணக்குக்கு கொடுப்பனவு செய்வதற்கு வங்கி அட்டை உறுப்பினரின் வங்கியில் உள்ள நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்குக்கு வங்கி அட்டை உறுப்பினர் ஒரு நேரடி நிலையான கடன் அறிவுறுத்தலை வழங்கலாம்.

25.13 அத்தகைய ஏதேனும் நிலையான அறிவுறுத்தலுக்கான எவையேனும் திருத்தங்கள் மற்றும் இரத்துச்செய்கைகள், அடுத்த கொடுப்பனவுக்குரிய திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னர் வங்கிக்குச் சென்றடைய வேண்டும் என வங்கி அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார்.

25.14 வங்கியில் உள்ள கொடுத்துத்தீர்த்தல் கணக்கொன்றுக்கு வழங்கப்பட்ட ஒரு நேரடி நிலையான கடன் அறிவித்தலுக்கு, பின்வரும் மேலதிக நியதி நிபந்தனைகள் ஏற்புடையதாகும்.

(அ) வங்கிக்கு முன்வைக்கப்பட்ட காசோலைகள் அல்லது வங்கியுடன் செய்யப்பட்ட வேறு எவையேனும் ஒழுங்கேற்பாடுகளுக்கெதிராக அத்தகைய ஏதேனும் நிலையான அறிவுறுத்தலின்

முன்னுரிமையைத் தீர்மானிப்பதற்கான உரிமையை வங்கி கொண்டிருக்கின்றதென வங்கி அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார்,அத்துடன்

(ஆ) கொடுப்பனவுக்குரிய திகதிக்கு முன்னரான நாளன்று, நிலையான அறிவுறுத்தலை எதிர்கொள்வதற்கென பெயர்குறிக்கப்பட்ட கொடுத்துத்தீர்த்தல் கணக்கிலுள்ள போதிய நிதிகளை வழங்குவதற்கு வங்கி அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார்.

கொடுத்துத்தீர்த்தல் கணக்கிலுள்ள மீதி போதியதாகவிராத பட்சத்தில், நிலையான அறிவுறுத்தல்களின்படி கொடுப்பனவுத் தொகையை மேவுவதற்கு காலத்துக்குக் காலம் மேலதிகப்பற்றுக்களை வங்கி அதன் தற்றுணிபில் வழங்கலாம். காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் நிலுவையாகவுள்ள எல்லாத் தொகைகளின் மீதும் திரண்ட நிதி விதிப்பனவுடன் சேர்த்து அவற்றை கோரிக்கையின் மீது மீளச்செலுத்துவதற்கு வங்கி அட்டை உறுப்பினர் பிணிக்கப்படுகின்றார்.

25.15 வங்கி அட்டை உறுப்பினருக்கு வங்கி அட்டை வழங்கப்பட்டபோது திகதியிடப்படாத காசோலையொன்று அத்துடன் ∴ அல்லது பண இணையுறு கோரப்படாத போது கூட வங்கி தேவைப்படுத்தக்கூடிய அத்தொகைக்காக வங்கி சார்பில் அத்தகைய காசோலை ஒன்றை வைப்பிலிடுமாறு அல்லது அத்தகைய பண இணையுறுவை அடைமானம் வைக்குமாறு வங்கி அட்டை உறுப்பினரை எந்நேரத்திலும் வங்கி கோரலாம். வங்கி அட்டை உறுப்பினர், அத்தகையதான சந்தர்ப்பமொன்றில், சொல்லப்பட்ட காசோலையில் திகதியை இடுவதற்கும் வங்கிக்கு வருமதியான ஏதேனும் தொகைக்கு எதிராக இடப்பட்ட திகதியன்று கொடுப்பனவுக்காக அதனை முன்வைப்பதற்கும் வங்கிக்கு அதிகாரமளித்துள்ளதாக கருதப்படுவார்.

25.16 வங்கி அட்டை உறுப்பினர், எவையேனும் பணங்கள் வேறுவகையாக வருமதியாக வந்துள்ள திகதிக்கு முன்னர் வருமதியாகவுள்ள அல்லது வருமதியானதாக வெளிப்படுத்தக்கூடிய அப்பணங்களைச் செலுத்துவதற்குத் தவறினால் அல்லது வங்கி அட்டை உறுப்பினர் வங்கியுடனான எந்த உடன்படிக்கையின் கீழ் ஏதேனும் நிதி / கடன் / வேறு வசதியை அனுபவிக்கின்றாரோ அந்த ஏதேனும் உடன்படிக்கையின் கீழ் ஏதேனும் தவறுகையைப் புரிந்தால், அப்போது அத்தகைய சந்தர்ப்பத்தில், வங்கியானது ஒவ்வொரு உடன்படிக்கையின் கீழும் அல்லது இவ்வுடன்படிக்கையின் கீழ் அதன் குறிப்பிட்ட உரிமைகள் எவற்றுக்கும் பங்கமின்றி வங்கியின் தற்றுணிபில் இவ்வுடன்படிக்கையில் தரப்பட்டவாறான அதன் எல்லா உரிமைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் பிரயோகிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டும் என வங்கி அட்டை உறுப்பினர் வெளிப்படையாக ஏற்றுக்கொள்கின்றார்.

25.17 வங்கியானது, எவரேனும் வங்கி அட்டை உறுப்பினர்களிடமிருந்தான வருமதிகளை நிலுவையாகவுள்ள தொகையை சேகரிப்பதற்கான அதன் அதிகாரமளிக்கப்பட்ட சேகரிப்பு

முகவராண்மைக்கு குறித்தளிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் வங்கியானது அவ்வாறு செய்வதில் அதனால் ஏற்கநேர்ந்த செலவுகளை வங்கி அட்டை உறுப்பினர் கணக்குக்கு அறவிடுவதற்கு உரித்துடையதாதலும் வேண்டும்.

25.18 வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது அவர் சார்பாக அனுப்பப்பட்ட ஏதேனும் கொடுப்பனவுச் சாதனம் ஏற்றுக்கொள்ளப்படாத விடயத்தில், வங்கியானது, வங்கி அட்டை உறுப்பினருக்கு எதிராக சட்டரீதியாக மேற்கொண்டு செல்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளதுடன் அதன் தற்றுணிபில் தண்டக் குற்றப்பணங்களை அறவிடும் அத்துடன; / அல்லது வங்கி அட்டைக் கணக்கை இரத்துச்செய்யும்.

25.19 இவ்வுடன்படிக்கையின் வேறு ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் அத்துடன் / அல்லது துணை நிலை வங்கி அட்டை உறுப்பினர் ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு இலங்கையில் இல்லாமல் இருக்க வேண்டியிருப்பின், அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் வங்கி அட்டைக் கணக்கில் கொடுத்துத்தீர்ப்பதற்கு தெளிவான மற்றும் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் அத்துடன் ∴ அல்லது துணை நிலை வங்கி அட்டை உறுப்பினர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் அத்தகைய அறிவுறுத்தல்களை வங்கி அட்டை நிலையத்துக்கு அறிவித்தலும் வேண்டும்.

## 26. மீறுகை:

எவரேனும் வங்கி அட்டை உறுப்பினர் இவ்வுடன்படிக்கையை மீறுகின்ற பட்சத்தில் : (அ) இவ்வுடன்படிக்கையின் வேறு ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், வங்கி அட்டை உறுப்பினர் அத்தகைய மீறுகையொன்றிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாக விளைவாக வருகின்ற ஏதேனும் இழப்புக்காக வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பார். (ஆ) வங்கி அட்டை உறுப்பினர், கோரிக்கைத் திகதியில் வங்கிக்கு வருமதியாகவும் செலுத்தப்படத்தக்கதாகவும் இருப்பினும் சரி அல்லாவிடினுஞ்சரி வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து வங்கிக்கு வரவுள்ள நிலுவையாகவுள்ள எல்லாத் தொகைகளையும் அத்தகைய கோரிக்கையின் மீது, வங்கிக்குச் செலுத்துவதற்குப் பொறுப்பாவார்.

## 27. முடிவுறுத்துகை:

27.1 அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் கீழே 30.3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையில் எழுத்தில் அல்லது வங்கிக்கு அழைப்பதன் மூலம் (ஏதேனும் துணை நிலை அட்டையை (அட்டைகளை) உள்ளடக்குகின்ற) வங்கி அட்டைக் கணக்கை முடிவுறுத்துவதற்கு எந்நேரத்திலும் கோரலாம். ஆயின் எவ்வாறாயினும், வங்கி அட்டைக் கணக்கின் (ஏதேனும்

துணை நிலை வங்கி அட்டை (அட்டைகள்) உட்பட) மொத்த நிலுவை வங்கி அட்டைக் கணக்கை முடிவுறுத்துவதற்கான கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் முழுமையாக கொடுத்துத்தீர்க்கப்படுகின்றது என வங்கி அட்டை உறுப்பினர் உறுதிப்படுத்துதல் வேண்டும். வங்கி அட்டைக் கணக்கில் (ஏதேனும் துணை நிலை வங்கி அட்டை (அட்டைகள்) உட்பட) ஏதேனும் கடன் மீதி இருப்பின், அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் அதனை மீளளிக்கும் முறை பற்றி வங்கிக்கு எழுத்திலான அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும், தவறும் பட்சத்தில் ஏதேனும் கடன்மீதி வங்கியினால் பெறப்படுதல் வேண்டும்.

27.2 அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் வங்கி அட்டைக் கணக்கை முடிவுறுத்துவதற்கு வங்கியைக் கோருகின்றதன் மேல், வங்கி அட்டை உறுப்பினர்கள், காந்தக் கீற்று வெட்டப்பட்டுள்ளது எனவும் வங்கி அட்டை, வங்கி அட்டை உறுப்பினரினால் (உறுப்பினர்களினால்) பாதுகாப்பாக அழிக்கப்படுகின்றது எனவும் உறுதிப்படுத்தி அந்தந்த தமது வங்கி அட்டையை நான்கு துண்டுகளாக வெட்டுதல் வேண்டும்.

27.3 மேற்கூறப்பட்டவாறு தவிர, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் அல்லது துணை நிலை வங்கி அட்டை உறுப்பினர் ஏதேனும் வங்கி அட்டையை அல்லது வங்கி அட்டைக் கணக்கை முடிவுறுத்துதலாகாது.

27.4 வங்கி அட்டை அழிக்கப்பட்டுவிட்டதாக வங்கி அட்டை உறுப்பினர் உரிமை கோரிய பின்னர் வங்கி அட்டை மீது விதிப்பனவுகளை ஏற்கநேரும் பட்சத்தில், அத்தகைய விதிப்பனவுகள் பிறழ்பயன்பாட்டின் விளைவானதாகவிருப்பினுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி அத்துடன் வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருந்தாலும் சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி வங்கி அட்டை உறுப்பினர் (உறுப்பினார்கள்) அத்தகைய விதிப்பனவுகளுக்கு முழுமையாகப் பொறுப்பாதல் வேண்டும்.

27.5 வங்கியானது, வங்கியின் தற்றுணிபில் தேவைப்படுத்துகின்ற சூழ்நிலைகள் பற்றிய அறிவித்தலுடன் வங்கி அட்டையை எந்நேரத்திலும் முடிவுறுத்தலாம். வங்கி அட்டை முடிவுறுத்தப்படுவதன் மீதும் வங்கிக்கும் வங்கி அட்டை உறுப்பினருக்கும் இடையிலான ஏதேனும் முன்னைய உடன்படிக்கை முரணாக எவ்வாறிருப்பினும்ளூ ை) வங்கி அட்டை உறுப்பினரினால் (உறுப்பினர்களினால்) வங்கி அட்டையைப் பயன்படுத்துவதற்கான உரிமை உடனடியாக இல்லாதொழிதல் வேண்டும்ளூ ைை) ஏற்கனவே வங்கிக்கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி, அப்போது நிலுவையாகவுள்ள எல்லா விதிப்பனவுகளினதும் மொத்தம், (இயைபான கொடுக்கல்வாங்கல் அறிவுறுத்தல் திகதியிலிருந்து பயனுறுவதாக) முடிவுறுத்துகையின் பின்னர் ஏற்கநேர்ந்த எவையேனும் விதிப்பனவுகளின் தொகை, அவை அவ்வாறு பிரதிபலிக்கப்பட்டிருப்பினும் கூட வங்கி அட்டை உறுப்பினரினால் (உறுப்பினர்களினால்) உடனடியாக வருமதியாகவும் செலுத்தப்படத்தக்கதாகவும் வருதல் வேண்டும் என்பதுடன் ஏற்புடையவாறு அதன் மீது வட்டி திரளும் அத்துடன், (ைைை)

எவையேனும் திரண்ட வெகுமதிப் புள்ளிகள் வங்கி அட்டைக் கணக்கின் முடிவுறுத்துகை பயனுக்கு வந்தவுடன் தன்னிச்சையாக இரத்துச்செய்யப்படும்.

27.6 பயனுறுத்தப்பட்ட ஆனால் இன்னும் வங்கி அட்டைக் கணக்குக்கு விதிப்பனவு செய்யப்படாத எவையேனும் நிலுவையாகவுள்ள வங்கி அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் தொகையுடன் சேர்த்து வங்கி அட்டைக் கணக்கின் நிலுவையாகவுள்ள மொத்த மீதி, இவ்வுடன்படிக்கை முடிவுறுவதன்மீது அல்லது வங்கி அட்டை உறுப்பினரின் வங்கிமுறிந்த தன்மை அல்லது இறப்பின்மீது வங்கிக்கு முழுமையாக வருமதியாகவும் செலுத்தப்படத்தக்கதாகவும் உடனடியாக வருதல் வேண்டும். வங்கி அட்டைக் கணக்கின் மீதான ஏதேனும் நிலுவையைக் கொடுத்துத்தீர்ப்பதற்கு வங்கி அட்டை உறுப்பினர் அல்லது அவரது வாரிசு பொறுப்பாகவிருப்பார் என்பதுடன் அத்தகைய நிலுவையை அறவிடுவதில் ஏற்கநேர்ந்த செலவுதொகைகள், விதிப்பனவுகள் (சட்டக் கட்டணங்கள் உட்பட) மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாக வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய மீள்கொடுப்பனவு முடிவுறாதுள்ள நிலையில், வங்கியானது அதன் நிலவுகின்ற வீதத்தில் (வீதங்களில்) நிதி விதிப்பனவுகள், வேறு கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளை தொடர்ந்து விதிப்பனவு செய்வதற்கு அது உரித்துடையதாகவிருக்கும்.

27.7 ஒன்றில் வங்கியினால் அல்லது வங்கி அட்டை உறுப்பினரினால் இவ்வுடன்படிக்கை முடிவுறுத்தப்படுதல் எவ்வாறிருப்பினும், வங்கி அட்டை உறுப்பினர், இவ்வட்டையைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்கநேர்ந்த எல்லா மேலதிக விதிப்பனவுகளுக்கும் தொடர்ந்து பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

27.8 அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் மேலேயுள்ள 27.1 ஆம் பிரிவின் நியதிகளின்படி வங்கி அட்டைக் கணக்கை முடிவுறுத்துவதற்கு விரும்புகின்றவிடத்து, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர், அத்தகைய முடிவுறுத்துகையைக் கோருவதற்கு முன்னர் எவையேனும் திரண்ட வெகுமதிப்புள்ளிகளை மீட்டிக்கொள்ளல் வேண்டும், தவறும் பட்சத்தில் அத்தகைய வெகுமதிப் புள்ளிகள் வங்கி அட்டைக் கணக்கின் முடிவுறுத்துகை பயனுக்கு வந்தவுடன் தன்னிச்சையாக இரத்துச் செய்யப்படும்.

**28. திருத்தங்கள்:**

28.1 வங்கியானது, காலத்துக்குக்காலம் இவ்வுடன்படிக்கையின் எவையேனும் நியதிகளை (சேர்ப்பதற்கான, வேறுபடுத்துவதற்கான, திரிபுபடுத்துவதற்கான, பதிலீடுசெய்வதற்கான அல்லது நீக்குவதற்கான உரிமை உட்பட) திருத்துவதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றது. அத்தகைய திருத்தம் ∴ திருத்தங்கள் பற்றிய அறிவித்தல் கீழேயுள்ள 30 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு வழங்கப்படலாம்.

28.2 வங்கி அட்டை உறுப்பினர், அத்தகைய திருத்தங்கள் பயனுக்கு வந்ததன் பின்னர் வங்கி அட்டையைத் தொடர்ந்து வைத்திருப்பின் அல்லது பயன்படுத்தின், வங்கி அட்டை உறுப்பினர் அவ்வுடன்படிக்கைக்கான மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளார் என வங்கி கருதுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினர் அத்தகைய திருத்தங்களை ஏற்றுக்கொள்ள விரும்பாவிடின், அடிப்படை வங்கி அட்டை உறுப்பினர் மேலே 27 ஆம் பிரிவில் (முடிவுறுத்துகை) விதிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க இவ்வுடன்படிக்கையை முடிவுறுத்துதல் வேண்டும். வங்கி அட்டை உறுப்பினர், அத்தகைய முடிவுறுத்துகைக்கு முன்னர் செய்யப்பட்ட எல்லாக் கணக்குகளுக்கும் விதிப்பனவுகளுக்கும் தொடர்ந்து பொறுப்பாதல் வேண்டும்.

**29. எச்சரிக்கை செய்திமடல்கள்:**

வங்கியானது, எத்தகையதுமான ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் வங்கி அட்டையைக் கைப்பற்றுமாறு சேவை நிலையங்களுக்கு அறிவித்து இலங்கையில் அல்லது வெளிநாட்டில் எச்சரிக்கை செய்திமடலில் வங்கி அட்டையைக் குறிப்பீடு செய்வதற்கான உரிமையையும் தற்றுணிபையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**30. அறிவித்தல்கள்:**

30.1 இவ்வுடன்படிக்கையின் கீழான ஏதேனும் அறிவித்தல் (அதன் எவையேனும் திருத்தங்கள் உட்பட) மற்றும் வங்கி அட்டைக் கணக்கு தொடர்பான ஏதேனும் அறிவித்தல், வங்கியின் (www.nationstrust.com), www.americanexpress.lk என்ற கூட்டிணைப்பு இணையத்தளத்தில் அத்துடன் / அல்லது தொடர்பாடலின் தன்மையின் அடிப்படையில் வங்கியினால் பொருத்தமானது என கருதப்படுகின்ற வேறு ஏதேனும் முறையில் உட்பட காகிதம் அத்துடன் / அல்லது இலத்திரனியல் தொடர்பாடல் வழிகளினூடாக அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்கு எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும். வங்கி அட்டைக் கணக்கின் வங்கிக்கூற்று தொடர்பான அல்லது அவ்வங்கிக்கூற்றின் பாகமொன்றாகச் செய்யப்பட்ட ஏதேனும் தகவலும் அல்லது அறிவிப்பும் இவ்வுடன்படிக்கையின் கீழான ஒரு அறிவித்தலாக கருதப்படுதல் வேண்டும்.
30.2 மேற்கூறப்பட்ட முறையில் வழங்கப்பட்ட அறிவித்தல்கள் பின்வருமாறு பயனுள்ளதாதல் வேண்டும்:

- அஞ்சல் மூலம் அனுப்பப்படின், அஞ்சலிடப்பட்டதன் பின்னர் ஐந்து (05) நாட்களில்லு
- மின்னஞ்சல், குறுஞ்செய்திச் சேவை ("SMS") அத்துடன் / அல்லது வேறு இலத்திரனியல் வடிவத்தில் அனுப்பப்படின், அவ்வாறு அனுப்புவதன்மீது (வங்கியானது

ஒப்படைப்புத் தவறுகை அறிவித்தலொன்றைப் பெற்றாலொழியளூ இவ்விடயத்தில், அது வேறொரு முறையில் அறிவிக்கப்படும்)ளூ அத்துடன்

- பகிரங்க அறிவித்தல்களாக நாளாந்த செய்தித் தாள்களில் செய்யப்படின், வங்கிக்கிளைகளில், தன்னியக்க வங்கிப் பொறிகளில் அல்லது வங்கியின் கூட்டிணைப்பு இணையத்தளமான (www.nationtrust.com), www.americanexpress.lk ஆகியவற்றில் அல்லது வேறு ஏதேனும் முறையில் பதிவிடப்படின், வெளியிடப்படும் அல்லது பதிவிடப்படும் நேரத்தில் அல்லது வங்கி அவ்வறிவித்தலில் குறிப்பிடுகின்ற அத்தகைய வேறு நேரத்தில்ளூ

மேற்கூறப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அறிவித்தல் போதியதும் முறையானதுமான அறிவித்தலாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் வங்கி அட்டை உறுப்பினர் (உறுப்பினர்கள்) மீது பிணிக்கப்படுதலும் வேண்டும்.

30.3 வங்கி அட்டை உறுப்பினரின் பெயர், தொடர்பு விபரங்களிலான (உதாரணமாக, வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட அஞ்சல் முகவரி, கையடக்கத் தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி, வேறு எவையேனும் விபரங்கள்) எவையேனும் மாற்றங்கள் உட்பட வங்கிக்கான எழுத்திலான ஏதேனும் அறிவித்தல் அத்துடன் / அல்லது வங்கி அட்டைக் கணக்கை இரத்துச் செய்வதற்கான ஏதேனும் கோரிக்கை, அஞ்சல் மூலம், மின்னஞ்சல் மூலம், வங்கியின் எண்ணிம வழிகளைப் பயன்படுத்துவதினூடாக அல்லது வங்கியுடன் பதிவுசெய்யப்பட்ட அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினூடாக வங்கி அட்டையின் மறுபக்கத்தில் அச்சிடப்பட்ட வாடிக்கையாளர் சேவை நிலைய இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்துவதன்மூலம் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரினால் வங்கிக்கு தாமதமின்றி அறிவிக்கப்படுதல் வேண்டும். மின்னஞ்சல் மூலம் அல்லது கையடக்கத்தொலைபேசி மூலம் அறிவிக்கப்படும் போது, வங்கியானது (ஏற்புடையவாறு) அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் பதிவுசெய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரி அல்லது பதிவுசெய்யப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்தினூடாக அறிவிக்கப்பட்ட அறிவித்தலை மட்டுமே ஏற்றுக்கொள்ளும். வங்கிக்கு அனுப்பப்பட்ட ஏதேனும் அறிவித்தல், வங்கியின் அப்போதைக்கு நிலவுகின்ற சேவை நியமங்களுக்கு இணங்க செயற்படுத்தப்படும்.

வங்கி அட்டை உறுப்பினரொருவர் இற்றைப்படுத்தப்பட்ட தொடர்பு விபரங்களை வங்கிக்கு வழங்காவிடின், அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்ளாமையினால் எழக்கூடிய ஏதேனும் இழப்பைத் தாங்குதல் வேண்டும். வங்கிக்கு கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரியில் / தொடர்பு விபரங்களில் வங்கி அட்டை உறுப்பினரை அடைய முடியாது என வங்கி நியாயமானமுறையில் நம்புகின்றவிடத்து வங்கியானது அறிவித்தல்களை அனுப்புவதை இடைநிறுத்தலாம் அல்லது

நிறுத்தலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில், வங்கி அட்டை உறுப்பினர் இந்நியதி நிபந்தனைகளின்கீழ் அறிவித்தலின் எல்லாத் தேவைப்பாடுகளையும் விட்டுக்கொடுக்கின்றார்.

30.4 வங்கியினால் வேறுவகையாக அறிவிக்கப்பட்டாலொழிய, அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து வங்கிக்கான ஏதேனும் அறிவித்தல் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

**அஞ்சல் மூலம்:** நேஷ்ன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பி எல் சி
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டை நிலையம்,
256, ஸ்ரீமத் ராமநாதன் மாவத்தை,
கொழும்பு 15.

**மின்னஞ்சல் மூலம்:** americanexpress@nationstrust.com

**31. வலுவுறுத்துவதற்கான செலவுகள்:**

அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரும் ஒவ்வொரு துணைநிலை வங்கி அட்டை உறுப்பினரும், எல்லா சட்டக் கட்டணங்களும் செலவீடுகளும் உட்பட இந்நியதி நிபந்தனைகளை வலுவுறுத்துவதில் அல்லது வலுவுறுத்துவதற்கு எத்தனிப்பதில் வங்கியினால் ஏற்கநேர்ந்த எவையேனும் மற்றும் எல்லாச் செலவுகளும் தொடர்பில் முழுமையான நட்டோத்தரவாத அடிப்படையில் வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கு கூட்டாகவும் தனிவேறாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

**32. துணைநிலை வங்கி அட்டைகள்:**

வங்கியானது அதன் தனித் தற்றுணிபில், காலத்துக்குக்காலம் வங்கியினால் முடிபுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்களுக்கு துணைநிலை வங்கி அட்டை ஒன்றின் வசதியை வழங்கலாம். வங்கி அட்டைக் கணக்கு மீதான எவரேனும் துணைநிலை வங்கி அட்டை உறுப்பினரும் அதன் வழங்குகைக்கு அதிகாரமளிக்கும் அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரும் அவ்வட்டையை (அவ்வட்டைகளை) பயன்படுத்துவதன் மூலம் ஏற்கநேர்ந்த எல்லா

விதிப்பனவுகளுக்கும் கூட்டாகவும் தனிவேறாகவும் பொறுப்புடையவர்களாவர். துணை நிலை வங்கி அட்டை ஒன்றின் வசதியானது அடிப்படை வங்கி அட்டை உறுப்பினரின் தொடர்ச்சியைப் பொறுத்து இருக்கும்.

**33. கொடுப்பனவுகளைப் பயன்படுத்துதல்:**

வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து அல்லது அவர் சார்பில் வங்கியினால் பெறப்பட்ட எவையேனும் மற்றும் எல்லாக் கொடுப்பனவுகளும், வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது கொடுப்பனவைச் செய்கின்ற வேறு எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட ஏதேனும் குறிப்பிட்ட ஒதுக்கீட்டு அறிவுறுத்தல் எவ்வாறிருப்பினும், வங்கி தகுதியானது என கருதுகின்றவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய ஒழுங்கிலும் வங்கியினால் பயன்படுத்தப்படலாம் அல்லது ஒதுக்கீடுசெய்யப்படலாம்.

**34. தொலைபேசி, இணையம் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அதிகாரவளிப்பும் நட்டோத்தரவாதமும்:**

34.1 முற்போந்தவையின் பொதுமைக்குப் பங்கமின்றி, அறிவுறுத்தல்களை வழங்கும் அல்லது வழங்குவதாகக் கொள்ளப்படும் ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் உட்பட வங்கியின் பக்கத்திலான எவ்வித விசாரணையுமின்றியும் அறிவுறுத்தல்கள் பெறப்படும் நேரத்தில் நிலவுகின்ற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமலும் வங்கி அட்டை உறுப்பினரினால் அல்லது அவர் சார்பில் தொலைபேசி, இணையம் அல்லது மின்னஞ்சல் மூலம் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய அல்லது வழங்கப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்தல், கோரிக்கை அல்லது வேறு அறிவித்தலின் மீது வங்கி தங்கியிருப்பதற்கும் அவற்றுக்கிணங்க செயலாற்றுவதற்கும் வங்கி அட்டை உறுப்பினர் அதிகாரமளிக்கின்றார். வங்கி அட்டை உறுப்பினர், அறிவுறுத்தல்களைப் பெறும் நேரம் / திகதி பற்றிய வங்கியின் முடிவை இறுதியானதாக ஏற்றுக்கொள்வார்.

34.2 அறிவுறுத்தல்கள் வங்கி அட்டை உறுப்பினரினால் முழுமையாக அதிகாரமளிக்கப்பட்டதாகவும் அவர் மீது பிணிக்கப்பட்டதாகவும் கருதுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அறிவுறுத்தலானது பணம் செலுத்துவதற்காக இருப்பினுஞ்சரி அல்லது வேறு வகையாக ஏதேனும் கணக்குக்கு பற்றுவைப்பதற்கு அல்லது வரவுவைப்பதற்காகவிருப்பினுஞ்சரி அல்லது ஏதேனும் பணத்தை அல்லது ஆவணங்களை கையுதிர்த்தலுடன் தொடர்பானதாகவிருப்பினுஞ்சரி அல்லது வங்கியுடன் அல்லது வேறு

எவரேனும் ஆளுடனான ஏதேனும் உடன்படிக்கைக்கு அல்லது வேறு ஒழுங்கேற்பாட்டுக்கு வங்கி அட்டை உறுப்பினரை பிணிப்பதாக கொள்ளப்படினுஞ்சரி அல்லது வங்கி அட்டை உறுப்பினரை வேறு ஏதேனும் வகையினதான கொடுக்கல்வாங்கலுக்கு அல்லது எத்தகையதுமான ஒழுங்கேற்பாட்டுக்கு வங்கி அட்டை உறுப்பினரை ஈடுபாடுகொள்வதற்காகவிருப்பினுஞ்சரி, சம்பந்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் அல்லது ஒழுங்கேற்பாட்டின் தன்மை அல்லது பணத்தொகையைப் பொருட்படுத்தாமலும் அறிவுறுத்தல்களின் நியதிகளில் ஏதேனும் பிழை, பொருள்மயக்கம், பிழையான புரிதல் அல்லது தெளிவின்மை எவ்வாறிருப்பினும் வங்கி தோதானதெனக் கருதுகின்றவாறான அறிவுறுத்தல்கள் தொடர்பாக அல்லது அவற்றில் நம்பியிருந்து அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு வங்கி உரித்துடையதாதலும் வேண்டும்.

34.3 இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாத நியதிகளுக்கிணங்க வங்கி செயலாற்றுவதைக் கருத்திற்கொண்டு, அறிவுறுத்தல்களிலிருந்து அல்லது அவை தொடர்பாக எழுகின்ற எத்தன்மையினதும் எவ்வகையினதுமான வங்கியினால் ஏற்கநேர்ந்த அல்லது அடையப்பட்ட இழப்புக்கள், உரிமைக் கோரிக்கைகள், வழக்குகள், வழக்கு நடவடிக்கைகள், கோரிக்கைகள், சேதங்கள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கும் எதிராக வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் வங்கியை நட்டோத்தரவாதமளிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கும் வங்கி அட்டை உறுப்பினர் இத்தால் இல்லாதொழிக்க முடியாத வகையில் பொறுப்பேற்கின்றார்.

34.4 இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதத்தின் நியதிகள், வங்கியானது வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து முடிவுறுத்துகை அறிவித்தலைப் பெற்றாலொழியவும் பெற்றுக்கொள்ளும் வரையும் அதன் மீது செயலாற்றுவதற்கு நியாயமான காலமொன்று இருந்தாலொழியவும் இருக்கும் வரையிலும் வலுவில் இருத்தலும் பயனுறுதலும் வேண்டும். ஆயின் அத்தகைய முடிவுறுத்துகை, அத்தகைய காலம் முடிவுறுவதற்கு முன்னர் இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாத நியதிகளுக்கிணங்க புரியப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் இவ்வதிகாரவளிப்பு மற்றும் நட்டோத்தரவாதத்தின் கீழான ஏதேனும் பொறுப்பிலிருந்து வங்கி அட்டை உறுப்பினரை விடுவிக்காது.

**35. நானாவிதமானவை:**

35.1 வங்கி அட்டை உறுப்பினர் தொடர்பாக தேவைப்படக்கூடிய எவையேனும் மேலதிகத் தகவலைப் பெற்றுக்கொள்வதற்கு தனது தொழில்தருநரை அல்லது வேறு ஏதேனும் மூலத்தைத் தொடர்புகொள்வதற்கு வங்கி அட்டை உறுப்பினர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். வங்கியானது, பட்டியலொன்றின் மீது வருமதியான கொடுப்பனவுகள் பற்றி தொலைபேசி மூலம் வங்கி அட்டை உறுப்பினருக்கு நினைவூட்டுவதற்கு அல்லது வங்கி அட்டை உறுப்பினர் சார்பில் தொலைபேசி அழைப்பைப் பெறும் ஆளுக்கு நினைவூட்டல் செய்தியொன்றை இடுவதற்கு உரித்துடையதாக இருக்கின்றது என வங்கி அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார். எழுத்திலோ

அல்லது வேறு வகையாகவோ வங்கி அட்டை மீது செலுத்தப்படத்தக்கவுள்ள வருமதிகள் தொடர்பாக வங்கி அட்டை உறுப்பினருக்கு நினைவூட்டுவதற்கு எத்தகையதுமான கடப்பாட்டின்கீழும் வங்கி இருத்தலாகாது என்பதுடன் மேற்சொல்லப்பட்டதன் மீது தனது விருப்பத்தெரிவையும் உரிமையையும் பிரயோகிக்கும் வங்கி கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

35.2 தனது வங்கி அட்டையின்மீது எவையேனும் நிலுவையாகவுள்ள மீதிகளுக்கு எதிராக தனது சொத்துக்கள் / பணங்களின் நடுக்கட்டலுக்காக தனது கம்பெனியை அல்லது தனது வங்கியாளரை நெருங்குவதற்கும் அதனுடன் சம்பந்தப்பட்ட வங்கி தகுதியானது எனக் கருதுகின்றவாறான எல்லாச் செயல்களையும், செயற்பாடுகளையும் மற்றும் காரியங்களையும் செய்வதற்கும் வங்கி அட்டை உறுப்பினர் இத்தால் இல்லாதொழிக்க முடியாத வகையில் சம்மதமளித்து வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். 35.2 என்னும் இப்பிரிவு இவ்வுடன்படிக்கையின் முடிவுறுத்துகையை உயிர்ப்பித்தல் வேண்டும்.

35.3 வங்கியின் உரிமைகள் எவையும் வங்கியின் ஏதேனும் செயல் அல்லது நடத்தையினால் அல்லது அத்தகைய உரிமைகளைப் பிரயோகிப்பதிலான ஏதேனும் அசட்டை அல்லது தாமதத்தினால் விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் ஒவ்வொரு உரிமையும் வங்கியினால் எழுத்தில் குறிப்பாக விட்டுக்கொடுக்கப்படும் வரை தொடர்ந்து முழுமையான வலுவில் இருத்தலும் பயனுடையதாக இருத்தலும் வேண்டும்.

35.4 வங்கி அட்டை உறுப்பினரொருவரின் எவையேனும் நிலுவைகள் மற்றும் வருமதிகளை அல்லது அவை எல்லாவற்றையும் வங்கியின் விருப்பத்தெரிவிலான எவரேனும் மூன்றாம் திறத்தவருக்கு விற்பனை செய்வதற்கு, கைமாற்றுவதற்கு அல்லது குறித்தளிப்பதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அவற்றுக்கான முழுத் தத்துவத்தையும் அதிகாரத்தையும் கொண்டிருத்தலும் வேண்டும் எனவும் அத்தகைய ஏதேனும் செயற்பாடு பற்றி வங்கியினால் வங்கி அட்டை உறுப்பினருக்கான எழுத்திலான அறிவிப்பு வங்கி அட்டை உறுப்பினரைப் பிணித்தல் வேண்டும் எனவும் வங்கி அட்டை உறுப்பினர் வெளிப்படையாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றார். வங்கி அட்டை உறுப்பினர், வங்கி அட்டை உறுப்பினரின் வங்கி அட்டைக் கணக்குக்கு இது சார்பாக ஏதேனும் செலவுத் தொகையை விதிப்பனவு செய்வதற்கு சம்மதமளித்து வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்.

35.5 வங்கி அட்டைக் கணக்கில் கடன் மீதி ஏதேனும் இருப்பின் அது, வங்கியின் பக்கம் எத்தகையதுமான ஏதேனும் வட்டிக் கடப்பாட்டை ஈர்த்தலாகாது என்பதை வங்கி அட்டை உறுப்பினர் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

35.6 தனது வங்கி அட்டை உறுப்பாண்மையின் பயனைக்கொண்டு அடிப்படை வங்கி அட்டை உறுப்பினருக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள லோயல்டி நிகழ்ச்சித்திட்டங்கள் எவையேனும்

இருப்பின் அவை, அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடையதாகக்கூடியவாறு தனிவேறான நியதி நிபந்தனைகளினால் ஆளப்படும். ஆயின் எவ்வாறாயினும், வங்கி அட்டைக் கணக்கினூடான ஏதேனும் கொடுப்பனவு தொண்ணூறு (90) நாட்களுக்கு மேல் தவணை கடந்ததாகவிருப்பின் அல்லது வங்கி அட்டைக் கணக்கு கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக நெறிபிறழ்ந்ததாகவிருப்பின், வங்கி அட்டைக் கணக்கினூடான எவையேனும் திரண்ட வெகுமதிப் புள்ளிகள் தன்னிச்சையாக இரத்துச் செய்யப்படும்.

35.7 சேவை நிலையங்கள், தமது வணிகப்பொருட்கள் அல்லது சேவை தொடர்பில் ஒரு கழிப்பனவு அல்லது விலை குறைப்பு விற்பனையொன்றை ஒழுங்குபடுத்தி நடாத்தும் போது அத்தகைய சேவை நிலையங்கள் வங்கி அட்டையை ஏற்றலாகாது.

**36. சட்டம் மற்றும் நியாயாதிக்கம்:**

இவ்வுடன்படிக்கை இலங்கைச் சட்டங்களுக்கு இணங்க ஆளப்படும் என்பதுடன் பொருளமைத்துக்கொள்ளவும்படும். சட்டம், அரசாங்க ஒழுங்குவிதிகள் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்டக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் அத்தகைய திருத்தங்களை அவசியப்படுத்தின், இவ்வுடன்படிக்கை தன்னிச்சையாக திருத்தப்பட்டதாகக் கருதப்படும். வங்கி அட்டை மற்றும் வங்கி அட்டைக் கணக்கு செல்லுபடியான மற்றும் சட்டமுறையான நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படலாம். வங்கி அட்டை உறுப்பினரொருவர் வங்கி அட்டையை அல்லது வங்கிக் கணக்கை வேறு ஏதேனும் நோக்கத்துக்காக பயன்படுத்தின் அல்லது வேறு எவரேனும் ஒருவர் பயன்படுத்துவதனை அனுமதிப்பின், அவ்வங்கி அட்டை உறுப்பினர் அத்தகைய பயன்பாட்டுக்கு பொறுப்பாவார் என்பதுடன் அத்தகைய பயன்பாட்டின் விளைவாக ஏற்கநேர்ந்த எல்லா இழப்புக்களுக்கும் / செலவுகளுக்கும் வங்கிக்கு மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனிக்கு மீளச் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படலாம்.

**37. குறித்தளிப்பதன் நியதிகள்:**

வங்கி அட்டை உறுப்பினர், இப்போதும் எதிர்காலத்தில் எந்நேரத்திலும் இவ்வுடன்படிக்கையை முழுமையாக அல்லது அதன் ஏதேனும் பாகத்தை வங்கியினால் ஏதேனும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பெனிக்கு அல்லது அதன் இணைந்த கம்பெனிகளில் அல்லது குறித்தளிக்கப்பட்டவர்களுள் (ஏதேனும் "அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உருவகம்") எவருக்கும் குறித்தளிப்பதற்கு இத்தால் சம்மதமளிக்கின்றார் என்பதுடன் அத்தகைய ஏதேனும் குறித்தளிப்பு வங்கியினால் அல்லது ஏதேனும் "அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் உருவகத்தினால்" வங்கி அட்டை

உறுப்பினருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் குறித்தளிப்பு பற்றிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியில் பயனுள்ளதாக வருதல் வேண்டும் எனவும் உடன்படுகின்றார்.